₹10

அறைகூவல்

Volume 52 Issue 12 December 2022

சமாதானத்திற்கான அழைப்பு



உன்னதத்திலிருக்கிற
தேவனுக்கு மகிமையும்,
பூமியிலே சமாதானமும்,
மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக...
– லூக்கா 2:14

நண்பர் சுவிசேஷ
ஜெபக்குழுவின்
இனிய கிறிஸ்துமஸ் &
புத்தாண்டு 2023
நல்வாழ்த்துக்கள்!



சமாதானத்திற்கான அழைப்பு

ஆரம்ப வரிகள்...

ஒரு குடும்பத்தில் ஒருவரையொருவர் மிகவும் நேசித்த இரண்டு சகோதரர்கள், தங்கள் சொத்தைப் பிரித்துக்கொள்ளும்போது எதிரிகளாகி, பல மாதங்களாக ஒருவரோடொருவர் பேசவில்லை. அவர்களுக்குள்ளாக இருந்த கசப்பு அவர்களை ஒருவரையொருவர் சந்திக்கவோ, கூடிவாழவோ அனுமதிக்கவில்லை. எனவே, அவர்கள் தங்கள் பண்ணைகளுக்கும் வீடுகளுக்கும் இடையில் ஒரு சுவரை எழுப்ப முடிவு செய்தனர். மேலும் அதைச் செய்ய தங்கள் தந்தையின் நண்பரான கட்டிடம் கட்டிடும் நபரை அழைத்தனர். இரவோடு இரவாக பெரும் சுவரை எழுப்பி, பிரச்சினைக்கு முடிவு கட்டி விடலாம் என்று நினைத்தனர். காலையில் அவர்கள் எழும்பியதும் பார்த்தால் ஆச்சரியப்படும் விதமாக, சுவருக்குப் பதிலாக தங்கள் சொத்துக்களுக்கு இடையே ஒரு பாலம் இருப்பதைக் கண்டார்கள். தொடக்கத்தில் கட்டிடம் கட்டிடும் நபர்மீது ஆத்திரமடைந்த அவர்கள், பின்னர் பாலத்தின் இரு முனைகளிலிருந்து ஒருவரையொருவர் பார்த்தபோது, இருவரும் ஒருவரையொருவர் ஆரத்தழுவி மன்னித்தார்கள். இருவருக்கும் இடையில் பெரும் சுவர் இருந்திருந்தால், காலம் முழுவதும் ஒருவரையொருவர் சந்திக்காமல் மன்னிக்காமல் இருந்திருப்பார்கள். ஆனால் பாலம் என்பதினால், ஒருவரையொருவர் சந்தித்ததும் தங்களுடைய சமாதானத்தைப் பகிர்ந்து கொண்டனர். ஆம், இன்று நாம் வாழும் சமுதாயத்திலும், திருச்சபைகளிலும், குடும்பங்களிலும் இத்தகைய சமாதான பாலங்களை அமைப்பதற்கு சிறந்த மனிதர்கள் தேவை. "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என மத்தேயு 5:9-ல் நாம் வாசிக்கிறோம். கிறிஸ்துமஸ் நெருங்கிவிட்டது; சமாதானப்பிரபுவின் பிறப்பைக் கொண்டாடப் போகிற நாம், இந்த குழப்பமான மற்றும் அமைதியற்ற உலகில் சமாதானத்தை அருளிச்செய்யும் தூதுவர்களாக இருக்க தேவன் நம்மை அழைக்கிறார். வேதாகமத்தில் 249 முறை 'சமாதானம்' என்ற வார்த்தையை நாம் காண்கிறோம். அதில் 156 முறை பழைய ஏற்பாட்டிலும், 93 முறை புதிய ஏற்பாட்டிலும் வாசிக்கிறோம். நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமென்றால், இயேசு நமக்கு அளிக்கும் அந்த சமாதானம் முதலாவது நமக்குள் இருக்க வேண்டும். "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை" (யோ.14:27) என்று ஆண்டவராகிய இயேசு கூறுகின்றார். அப்படியானால், நாம் வாழும் இந்த உலகம் கொடுக்கும் சமாதானம் என்பது நிலையற்றது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறக்கூடியது, ஏமாற்றத்தை மட்டுமே கொடுக்கும், விரைவில் காணாமல்போகும் சமாதானமாகவே அது காணப்படுகின்றது.

இன்று இவ்வுலகில் நம்மைச் சுற்றிலும் வாழும் அநேக மக்கள், செல்வந்தர்கள் மற்றும் பிரபல மானவர்கள் 'மெய்யான சமாதானம் அது எங்கு கிடைக்கும்?' என்று தேடி, அதற்காக காடு, மலை என எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பாத யாத்திரை செய்யவும், தங்களையே வதைத்துக்கொள்ளவும், தங்களுடைய காலத்தையும் நேரத்தையும் செல்வத்தையும் செலவழிக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால், 'இது கிறிஸ்துவினால் மட்டுமே கிடைக்கும்; அதுவும் இலவசம்' என்ற நற்செய்தியைச் சொல்ல புறப்படும் அழகான கால்களும், அறிவிக்கும் திட்டமான நாவும் இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நமக்குத் தேவை. இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுத்திருக்கும் மெய் சமாதானத்தை நம்மைச் சுற்றியுள்ள அநேகருக்கு அறிவித்து, அச்சமாதானத்தை உண்டுபண்ணும் தேவப்பிள்ளைகளாய் தேசமெங்கும் வலம் வருவோம். சமாதானத்தை இவ்வுலகிற்குக் கொடுக்கவந்த சமாதானப்பிரபுவை அனைவரின் உள்ளத்திலும் இல்லத்திலும் குடியமர்த்தும் தேவ சமாதானத்தின் தூதுவர்களாய் முகவரி அறிந்தவர்களோடு மட்டுமல்லாது, அறியாதவர்களோடும் இயேசுவின் அன்பை நாம் அன்போடு பகிருவோம்.

- மெர்சி செல்வின் *(தகவல் தொடர்புத்துறை)*

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. – யோவான் 14:27

நாம் நம்முடைய மனக்கசப்பை ஊற்றும்போது, அதில் தேவன் தம்முடைய சமாதானத்தை ஊற்றுகிறார். – F.B. மேயர்

கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.
– 2 கொரிந்தியர் 13:11

பல பெரிய மனிதர்கள் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். ஆனால், அது ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டாயிற்று. நாம் செய்யவேண்டியதெல்லாம் தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள அந்த சமாதானத்திற்குள் பிரவேசிக்க வேண்டியது மட்டுமே. – D.L. மூடி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நமது தரிசனம்:
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

நமது ஊழியம்:
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

feedbackfmpb@fmpb.org
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

தனிப்பிரதி ரூ.10/-	வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ.48/-	ஆண்டு சந்தா ரூ.480/-
ஆயுள் சந்தா ரூ.500/-	ஆயுள் சந்தா ரூ.5000/-

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை – 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



பொதுச்செயலாளரிடமிருந்து...

இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்தியர்களுக்கு அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு, சர்வ வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களனைவருக்கும் எனது அன்பின் நல் வாழ்த்துக்கள்!

காற்றிலே மிதந்து வரும் கிறிஸ்து பிறப்புப் பண்டிகையின் நற்கந்தத்தை நுகரும்வண்ணம் நாம் இந்த ஆண்டு 2022-ன் இறுதி மாதத்திற்குள் அடியெடுத்து வைத்திருக்கிறோம். நமது வாழ்விலும், உலகமெங்கிலும் நிறைய குழப்பங்களும் நிச்சயமற்ற நிலைகளும் நிலவி வந்த போதிலும், தேவன் நமக்கு நல்ல அடைக்கலமாக இருந்து இதுவரை நம்மைத் தாங்கி வந்திருக்கிறார். கிறிஸ்துமஸ் என்று நாம் சிந்திக்கும்போது, 'கீழ்ப்படிதல்' என்ற ஒரு வார்த்தை உடனடியாக நம் மனதில் புலப்படுகிறது. தம்மையே வெறுமையாக்கும் பிதாவின் திட்டத்திற்கு இயேசுகிறிஸ்து கீழ்ப்படிந்ததின்மூலம் முதல் கிறிஸ்துமஸ் சாத்தியமானது. மனுக்குலம் மற்றும் சிருஷ்டிப்பின் மீட்பிற்காக இயேசுகிறிஸ்து தம்மையே சிலுவையில் பலியாக்கிட இந்த உலகத்திற்கு வந்தார். குழந்தை இயேசுவை சுமக்க மரியாள் கீழ்ப்படிந்ததாலும், தன் மனைவியைச் சேர்த்துக்கொள்ள ஜயப்படாதே என்ற தேவ கட்டளைக்கு யோசேப்பு கீழ்ப்படிந்ததாலும் கிறிஸ்து பிறப்புப் பண்டிகை கைக்கூடி வந்தது. மேய்ப்பர்கள், ஞானிகள் மற்றும் பலரின் கீழ்ப்படிதலையும்கூட நாம் இங்கே புறக்கணித்துவிட முடியாது. கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை நம் தேசத்தின் வெகுஜனங்களுக்குக் கொண்டு செல்வதற்கு அதே கீழ்ப்படிதல் முன்பைவிட இன்று நமக்கு அதிகம் தேவைப்படுகிறது. "நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதி முதல் கேட்டிருக்கிறபடி நடந்து கொள்ளவேண்டிய கற்பனை இதுவே" என்று 2 யோ.6 கூறுகிறது.

நடத்தப்பட்ட கூடுகைகள்

இணையவழி மாநாடு - கர்த்தார்: கடந்த 2022 அக்டோபர் 20 முதல் 22-ம் தேதி வரை இணையவழி மாநாடு மத்திய கிழக்கு தேசங்களில் வாழுகிற நமது ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் பங்காளர்களுக்காக நடத்தப்பட்டது. இம்மாநாடு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. இதை ஒழுங்குச் செய்த அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன்.

கர்நாடகா மாநில முகாம்: பெங்களூரில் வைத்து அக்.22, 23-ம் தேதிகளில் கர்நாடகா மாநிலத்தின் 11-வது மாநில முகாம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. மழையினிமித்தமாக அரசு அதிகாரிகள் மஞ்சள் நிற அடையாள எச்சரிப்பு கொடுத்திருந்தாலும், தேவன் நமது ஜெபத்தைக் கேட்டு அம்மாநாட்டை வெகுச்சிறப்பாக ஆசீர்வதித்து, 749 பேர் பதிவு செய்து அதில் கலந்துகொள்ள வழிநடத்தினார்.

சந்தோஷ வித்யாலயா பள்ளி முதல்வருடன் சந்திப்பு: மனிதவள மேம்பாட்டுத்துறை செயலாளரும் நானும் அக்.25-ம் தேதி டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயா பள்ளி முதல்வரைச் சந்தித்து, பிள்ளைகளின் பராமரிப்பு மற்றும் கல்வி நிலை குறித்த காரியங்களைக் கலந்தாலோசித்தோம். விடுதியுடன் கூடிய இப்பள்ளியில் நமது 220 மிஷனரிகளின் பிள்ளைகள் படித்து வருகிறார்கள். இப்பள்ளிக்கும், ஆசிரியர்களுக்கும், இதில் பயின்றுவரும் பிள்ளைகளுக்கும் நமது ஜெபம் அதிகமாக தேவைப்படுகிறது.

சிறுவர் பிரிவு தன்னார்வ ஊழியர்களுடன் சந்திப்பு: தேவன் நமது இயக்கத்தில் நற்திறமை மிக்க அர்ப்பணிப்புள்ள தன்னார்வ ஊழியர்களை எல்லா பிரிவுகளுக்கும் குறிப்பாக, சிறுவர் பிரிவுக்கும் தந்தருளியுள்ளார். அவர்களைச் சந்தித்து, அவர்களோடு நமது சிறுவர் ஊழிய

தரிசனத்தைப் பகிர்ந்து கொண்டு, நமது இயக்க ஆதரவாளர்களின் பிள்ளைகளை அவர்கள் சந்திப்பதைக் குறித்தும் அப்பிரிவின் ஊழிய வருங்கால திட்டங்களைக் குறித்தும் ஆலோசித்தோம்.

வடஇந்திய விரிவுப்பணி செயலாளர்கள் கூடுகை: மேற்கு வங்காளத்திலுள்ள சிலிகுரி பகுதியில் வடஇந்திய விரிவுப்பணி செயலாளர்களின் கூடுகை நடத்தப்பட்டது. மிகவும் பரந்து விரிந்த வடஇந்தியப் பகுதிகளில் விரிவுப்பணி செய்யும் ஊழியர்களின் இக்கூடுகை மிக நேர்த்தியாக அமைந்தது. இக்கூடுகையில் புதிய ஜெபக்குழுக்களை உருவாக்குவது குறித்த திட்டங்கள் சிறப்பாக வகுக்கப்பட்டன.

மத்திய மண்டல மிஷனரிக் குடும்பக்கூடுகை: ஆந்திரப் பிரதேசத்திலுள்ள காக்கிநாடாவில் வைத்து மத்திய மண்டல ஊழியர்களுக்கான ஆவிக்குரிய மேம்பாட்டு கூடுகை - 2022, காக்கிநாடாவில் நமது ஊழியத்தை அதிக வாஞ்சையோடு ஆதரித்துவரும் போதகர் சாம் பென்னி அவர்களுடைய இம்மானுவேல் திருச்சபையில் வைத்து ஆசீர்வாதமாக நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ஒவ்வொரு மிஷனரிக்குடும்பங்களும் திருச்சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்தது, கூடுதல் சிறப்பாக அமைந்தது.

சேலம் ஸ்கேன் கூடுகை: மிகக் கடுமையான காலசூழ்நிலையின் மத்தியிலும் நவ.13-ம் தேதி ஸ்கேன் குடும்பக்கூடுகை சிறப்பாக நடத்தப்பட்டது. வாலிபர்களையும், ஜெபக்குழுத்தலைவர்களின் பிள்ளைகளையும் கொண்டு இக்கூடுகை ஒழுங்குச் செய்யப்பட்டிருந்தது, இதன் சிறப்பம்சமாகும்.

பிற கூடுகைகள்: நவ. 28-ம் தேதி ஆகாய் நிறுவனப்பயிற்சியாளர்களைக் கொண்டு நமது மிஷனரிகளுக்குப் பயிற்சியளிக்கவும், 2-ம் கட்டத்தலைவர்களை உருவாக்கவும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நவ.29 முதல் டிச.1-ம் தேதிகள் வரை பணித்தள மண்டலச் செயலாளர்களுக்கான சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது.

நடைபெறவிருக்கும் கூடுகைகள்: டிச.3,4-ம் தேதிகளில் நமது இயக்கத்தின் **நிர்வாகக்குழு கூடுகை** நடைபெறவிருக்கிறது. டிச.5-ம் தேதி NSM **தலைவர்களோடு ஊழியப் பங்களிப்பைக்** குறித்தான கூடுகையொன்று நடைபெறவிருக்கிறது. **வடஇந்திய திருச்சபைகளின் சினாட் (CNI)** இடைக்கால பொதுச்செயலாளர், டிச.7-ம் தேதி டெல்லியில் வைத்து நடைபெறவிருக்கும் அவர்களது 17-வது சினாட்டின் துவக்கக்கூடுகைக்கு நமது இயக்கத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்க அழைப்பு விடுத்திருக்கிறார். நான் டிச.11,12- ம் தேதிகளில் திண்டிவனம் பகுதியில் வைத்து நடைபெறவிருக்கும் **விரிவுப்பணி கூடுகையில்** கலந்துகொள்ளவிருக்கிறேன். டிச.13 முதல் 16-ம் தேதி வரை **டிவிஷனல் ஊழியச்செயலர்களோடு** 2 நாட்கள் உபவாச ஜெபமும், 2 நாட்கள் திட்டக்கூடுகையும் நடைபெறவிருக்கிறது. டிச.27 முதல் 30-ம் தேதி வரை **தென் மண்டல விரிவுப்பணி தலைவர்களோடு** மாவட்ட வாரியாக திட்டக்கூடுகை நடத்தப்பட இருக்கிறது.

கிறிஸ்துமஸ் பரிசு: நாம் இயக்கமாக நமது ஊழியர்களுக்கும் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும், சுதேச ஊழியர்களுக்கும், தன்னார்வ ஊழியர்களுக்கும் கிறிஸ்துமஸ் பரிசுத்தொகையும், நமது விடுதியிலுள்ள 1340 பிள்ளைகளுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதியும் கொடுக்கவிருக்கிறோம். ஆதலால், அனைத்து மிஷனரி & சிறுவர் ஆதரவாளர்களும் நன்கொடையாளர்களும் தங்களது மனமுவந்த, உதாரத்துவமான கிறிஸ்துமஸ் அன்பளிப்பைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அனைத்து அன்பளிப்புகளும் ஒன்றிணைக்கப்பட்டு, தேவ ஊழியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பாக நமது ஊழியர்களுக்கும், ஜெபக்குழுத் தலைவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எமது ஆசீர்வாதமான கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவன்தாமே தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் தமது சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிரப்புவாராக!

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



அருட்திரு. S. ஜாண் பெர்லின்



தேவ சமாதானம்

இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே சமாதானத்தின் ஆரம்பமும் அஸ்திபாரமுமாய் இருக்கிறார்.

சமாதானத்தின் ஆதாரம் – தேவனே சமாதானத்தின் ஆதாரமாகவும், பிரபுவாகவும் இருக்கிறார். லூக்.24:36, யோ.20:26 ஆகிய வசனங்களில் சமாதானப்பிரபுவாகிய இயேசுகிறிஸ்து சமாதானத்தை அறிவித்தார். அவரின் பிறப்பு தேவ தூதர்கள் மூலமாக உலக மக்களுக்கு சமாதானத்தை அறிவித்தது (லூக்.2:13,14). எபி.7:2-ல் அவர் 'சமாதானத்தின் இராஜா' என்று அழைக்கப்படுகிறார். தேவன் மனிதனை இவ்வுலகத்தில் படைத்தது, அவரோடு அவன் சமாதானமாய் இருப்பதற்காகவே. ஆனால் மனிதன் தன் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற முனைந்து, அந்த சமாதானத்தை குலைத்துப்போட்டான். இந்த சூழ்நிலையில் நம் பாவங்களை நீக்கி, மனிதனுக்கு தேவனோடுள்ள முடிவில்லா சமாதானத்தை மீண்டும் கொடுப்பதற்காகவே, இவ்வுலகத்தில் பாலகனாக மீட்பராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். ஏசா.9:7-ல் அவர் இந்த முடிவில்லா நித்திய சமாதானத்தைக் எவ்வாறு நமக்கு உண்டுபண்ணுவார் என்றும், நம் ஆக்கினையைத் தம்மேல் சுமந்து கொண்டு, நமக்கு சமாதானத்தை எப்படி உண்டுபண்ணினார் என்றும் ஏசா. 53: 5-ல் வாசிக்கிறோம்.

சமாதானத்தின் ஆசீர்வாதம் – இன்றும் அநேகர் ஆஸ்தி, அந்தஸ்து போன்ற வற்றைப் பெரிய அளவில் வைத்திருந்தாலும், அவர்களால் இந்த சமாதானத்தை அனுபவிக்க முடிவதில்லை. எனவே தான்,

1. அக ஒளியேற்றும் தேவனோடு சமாதானம்:

'சமாதானம்' என்ற ஒன்று இல்லை என்றால் நமது வாழ்வு முழுமையடையாது. ஏனென்றால், சமாதானம் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்விலும் மிக முக்கிய மான பங்கு வகிக்கின்றது. வேதத்தில் சமாதானம் மற்றும் தேவனைக் குறித்துக் கூறும்போது 'சமாதானத்தின் தேவன்' என்றும், 'தேவ சமாதானம்' என்றும் இரு பதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை இரண்டும் பிரிக்கக்கூடாதவை. "நாம் ... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோ.5:1) என வேதம் கூறுகிறது.

சமாதானத்தின் ஆரம்பம் – எல்லா மனிதர் களும் பாவிகளாயிருக்கிறபடியினாலே, ஒருவன் முதலாவது தன்னை உண்டாக்கின தேவனோடு சமாதானம் செய்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. இது கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமே சாத்தியமாகும். ஏசா.9:6-ல் இவ்வுலகத்தின் சமாதானப்பிரபு பிறக்கப்போவதாக ஏசாயா தீர்க்கன் உரைத்திருக்கிறார். ஆகவே,

மக்கள் யோகா, தியானப் பீடங்கள், மது, மாது மற்றும் போதைப்பொருட்கள் போன்றவற்றை நாடுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு இரட்சகராகிய இயேசு ஒருவரே சமாதானத்தைத் தர முடியும். இந்த சமாதானம் உலகம் கொடுக்கவும், எடுக்கவும் முடியாத ஒன்றாகும். பிறருக்கு சமாதானப்பிரபு பிறந்துவிட்டார் என்பதைக் கூறுவதற்கு முன், தேவனோடு நமக்கு உள்ளத்தில் இந்த மெய் சமாதானம் உண்டா என்று நம்மையே நாம் ஆராய்ந்து, இந்த சமாதானத்தைப் பெற்றுக்கொள்வோம். "கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்" (மத்.7:8).

2. அனுபவமாகும் உள்ளான சமாதானம்:

ஒரு ராஜா தன் தேசத்திலுள்ள அனைத்து ஓவியர்களையும் அழைத்து ஒரு போட்டியை அறிவித்தார். அந்த ஓவியர்களுக்கு அந்த ராஜா 'சமாதானம்' என்ற தலைப்பைச் சித்தரிக்கும்வண்ணம் ஓவியத்தை வரைய கட்டளையிட்டார். பலர் பலவிதமான ஓவியங்களை வரைந்தனர். அதில் இரண்டு ஓவியங்கள் மாத்திரமே இறுதிச் சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டன. அதில் ஒன்றில், ஒரு அமைதியான ஓடையில் இரண்டு அன்னப்பறவைகள் நீந்திக் கொண்டிருந்தன. மற்றொன்றில், ஒரு கரடு முரடான மலைப்பகுதி. அதிலிருந்து ஆர்ப்பரித்துக்கொட்டும் ஓர் நீர்வீழ்ச்சி, சாரலும் அடித்துக்கொண்டிருந்தது. இதில் எந்த ஓவியருக்குப் பரிசை வழங்கலாம் என்று ராஜா யோசிக்கும்போது, இரண்டாம் படத்தில் அவர் நீர்வீழ்ச்சி விழும் அந்த பாறைகளுக்கு இடையே ஒரு பறவை கூடு கட்டி வாழும் ஒரு காட்சியையும் கண்டு, அந்த ஓவியருக்கே முதல் பரிசை வழங்கினார். சுற்றிலும் அமைதியற்ற சூழ்நிலையிலும், அமைதலாக ஜீவனம்பண்ணும் அந்த பறவை அழகிய சமாதானத்தை நமக்கு விளக்குகிறது. சமாதானம் என்பது கஷ்டம், துயரம் இல்லாத வாழ்க்கை அல்ல. மாறாக, எந்த பிரச்சினைகள் மத்தியிலும் கலங்காமல் நிற்பதே மெய்யான உள்ளான சமாதானமாகும்.

உள்ளான சமாதானம் – இந்த சமாதானத்தையே கிரேக்கப்பதத்தில் "eirene" என்று சொல்லுகிறோம். தேவனோடுள்ள சமாதானம் சரியாக இருந்தால் மட்டுமே, ஒருவர் தனக்குள் சமாதானமாய் இருக்க முடியும். இந்த உள்ளான சமாதானத்தை உலகமும் கொடுக்க முயற்சிக்கிறது. ஆனால், அது நிரந்தரமான சமாதானம் அல்ல. தேவனே நமக்கு நிரந்தரமான சமாதானத்தை வாக்குத்தத்தம் செய்துள்ளார் (யோ.14:27). இந்த உலகம் கொடுக்கும் சமாதானம் வெளிப்புறமானது மட்டுமல்லாமல் தற்காலிகமானதும்கூட. இந்த தற்காலிகமான சமாதானம் ஏதோ ஒரு மரணம், பிரச்சினை, வியாதி வரும்வரை தான். அதன்பின் சமாதானமற்ற சூழ்நிலையே காணப்படுகிறது. ஆனால், நமது ஆண்டவராகிய இயேசு கொடுக்கும் சமாதானமோ நிரந்தரமானதாகும். இந்த சமாதானம் நம்மைச் சுற்றி நேரிடும் பல போராட்டங்கள் மத்தியிலும் விலகாமல் என்றும் நமக்குள் தங்கியிருக்கும். இதுவே, தேவன் நமக்குள் கொடுக்கும் மெய்யான சமாதானமாகும்.

வலுவான சமாதானம் – ஆவிக்குரிய அல்லது உள்ளான சமாதானம் நமக்குள் இருப்பதும், இல்லாமல் போவதும் நம் சிந்தையைப் பொருத்தே அமைகிறது. ரோ.8:5,6-ல் இரண்டு விதமான மக்களைக் குறித்து வாசிக்கின்றோம் – மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மற்றும் ஆவியின்படி நடக்கிறவர்கள். நம் மனம் பாவச்சிற்றின்பங்கள், செல்வம், மதிப்பு போன்ற உலகப்பிரகாரமான காரியங்களிலேயே உழன்று கொண்டிருக்குமானால், நாம் பாவ மாம்சத்தின்படி வாழ்கிறோம்.

இதன் முடிவு மரணம். ஆனால் நமது மனம் நீதி, அன்பு, தாழ்மை, இச்சையடக்கம் என ஆவியானவருக்கு விருப்பமான காரியங்களின்மேல் இருந்தால் நாம் ஆவியின்படி வாழ்கிறோம் என்பது நிச்சயமே. இதன் முடிவு நித்திய ஜீவனும், சமாதானமுமாம். எனவே நாம் உள்ளான சமாதானம் பெற தியானப் பீடங்களையோ, குருக்களையோ நாட வேண்டிய அவசியம் இல்லை. நம் சிந்தையை மட்டுமே சீர்தூக்கிப் பார்த்து தேவனைக் கிட்டிச்சேர்வோமானால், நமது உள்ளான சமாதானத்தை நன்கு வலுவடையச் செய்யலாம்.

மகிழ்ச்சியான சமாதானம் - இந்த உள்ளான சமாதானத்தை நாம் பெற்றுக் கொள்வதற்கு அவசியம் என்னவென்றால், நாம் மற்றவர்களுடன் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும். சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க நம்மை அழைத்த தேவன், நமக்குள்ளாக இந்த உள்ளான சமாதானத்தைத் தருகிறார். அதற்கு நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவில் நாம் விசுவாசம் வைத்து நீதிமான்களாக்கப்படுவதின் மூலமாக மட்டுமே, இந்த உள்ளான சமாதானத்தைக் கண்டடைய முடியும் (ரோ.5:1). இந்த மெய்யான உள்ளான சமாதானத்தைப் பெற நாம் பாக்கிய வசனங்களில் சொல்லப் பட்டுள்ளவற்றைக் கடைபிடிக்கிற மனிதர் களாய் வாழ வேண்டும். ஆவியில் எளிமை, சாந்தகுணம், நீதியின்மேல் பசிதாகம், இரக்கம் மற்றும் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் (மத்.5:3-8). இந்த பாக்கிய வசனங்கள் அனைத்தும் நம் வாழ்வில் வேரூன்றும்போது மட்டுமே, நம்மால் இந்த உள்ளான சமாதானத்தை மகிழ்ச்சியான சமாதானமாய் அனுபவிக்க முடியும். இந்த அனுபவம் தேவனை முதலாவது நேசிப்பதாலும், பிறரை நேசித்தபின் நம்மை நேசிப்பதாலும் நமக்குக் கிடைக்கும். இப்படிப்பட்ட உள்ளான மகிழ்ச்சியான சமாதானத்தை நாம் ஒவ்வொருவரும் பெற்று அனுபவிப்போம்.

3. வெளியான தாக்கத்தை ஏற்படுத்தும் சமாதானம்:

"shalom" என்றழைக்கப்படும் சமாதானம் என்பது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் உள்ளான சமாதானத்தின் நிறைவை வெளியே காண்பித்தலாகும். பழைய ஏற்பாட்டில் 'ஷாலோம்' என்ற சொல் முழுமை, நன்றாக இருப்பது, நிறைவான ஆரோக்கியம் போன்ற அர்த்தங்களைக் கொண்டது. நமது உள்ளான சமாதானத்தின் நிறைவு தான் நம்மை மற்றவர்களோடும் சமாதானமாக இருக்கப்பண்ணும். உள்ளான சமாதானத்தில் நிலைத்திருப் போர் மட்டுமே வெளியான சமாதானமாகிய ஷாலோமில் நிலைத்திருக்க முடியும். பரிசுத்த வேதாகமத்தில் எபி.12:14-ல் கூறப்பட்டுள்ளப்படி, யாவரோடும் சமாதான மாயிருக்க நாம் அழைக்கப்படுகிறோம். யோ.1:12-ன்படி அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் வைக்கும் அத்தனை பேரும் அவருடைய பிள்ளைகளாக மாறுகின்றனர். ஆனால் மத்.5:9-ன்படி, நாம் மற்றவர்களோடு சமாதானம்பண்ணும்போது மாத்திரமே அவருடைய புத்திரர்களாக மாறுகிறோம். நம்மில் அநேகர் இன்னும் தேவனுடைய சிறுபிள்ளைகள் என்கிற நிலையிலேயே இருக்கின்றோம். ஆனால் நாம் வளர்ந்து பெரியவர்களாகி, மகன்கள் / மகள்கள் என்கிற நிலையை அடைய வேண்டுமானால், மற்றவர்களோடு சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும். நமது ஆண்டவரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட சமாதானம் நமக்குள் மட்டும் இருந்துவிடாமல், அதை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்வதையே 'மேலிருந்து கீழ்நோக்கி வந்த ஷாலோம்' என்கிறோம். இந்த ஷாலோம் நமது குடும்பத் தின் மத்தியிலும், பணி செய்யும் இடத்திலும்,

தெரிந்த மக்கள் மற்றும் நாம் சந்திக்கிற அனைவரிடத்திலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுது தான் மெய்யான சமாதானத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று அர்த்தம். இதைத்தான் ஆதித்திருச் சபையினர் ஒருவரையொருவர் சந்திக்கும் போது, 'ஷாலோம்' என்று கூறுவர்.

சமாதானத்தைத் தேடு – மற்றவர்களோடு சமாதானமாக இருக்கும்போது மட்டுமே, அன்புக்கும் சமாதானத்திற்கும் காரணராகிய தேவன் நம்மோடு இருப்பார். நாம் யாரிடமாவது சமாதானம் ஆகாமல் இருக்கிறோமா என்பதை தேவ சமூகத்தில் வரும்போதெல்லாம் கண்டுபிடித்து அவர் களோடு ஒப்புரவாகி, சமாதானத்தை நிலைநாட்ட அழைக்கப்படுகிறோம். "பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்" என 1பேது. 3:11-ல் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட சமாதானம் நம்மில் குறைந்து போயிருக்குமானால், தீமையை விட்டு விலக நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். "சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்து கொள்" என சங்கீதக்காரனும் சங்.34:14-ல் கூறுகிறார்.

சமாதானத்தை நாடு – கிறிஸ்துவுக் குள்ளான நாம், தேவனுக்குப் பிரியமானவர் களாகவும் மனுஷரால் அங்கீகரிக்கப் பட்டவர்களாகவும் மாற, சமாதானத்துக் கடுத்தவைகளையும் பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக் கடவோம் என்று ரோ.14:19-ல் வாசிக் கிறோம். அதுபோல், நாம் சுத்த இருதயத் தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிற வர்களுடனே சமாதானத்தை அடையும் படி நாட வேண்டும் என பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (2தீமோ.2:22). அப்படியானால், நமது திருச்சபை மக்களோடு கூட நமக்குப் பக்திவிருத்தி உண்டாக நாம் சமாதானத்தை நாட வேண்டியது நமது கடமையாகும்.

சமாதானத்திற்காகப் போராடு – வாழ்க்கையே போராட்டம். அதில் நம்மைச் சுற்றியுள்ள மக்களோடு சமாதானம் என்பது மிகப்பெரிய போராட்டமாகவே இருக்கும். திருவிருந்தின்போது நமது வலது பக்கம், இடது பக்கம் இருப்போருக்கு சமாதானம் என்று எளிதாகக் கூறிவிட முடியும். ஆனால் நமக்கு நன்மை செய்யாத, நம் வாழ்வில் இடையூறாகவே இருக்கும் மக்களோடும் நாம் சமாதானத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். அவர்களை மன்னிக்கவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் நமது ஆண்டவர் கற்றுக்கொடுத்திருக்கிறார். எபே.4:3-ல் "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று பவுல் கூறுகிறார். எனவே, நம்மால் மன்னிக்க முடியாத மக்களைத் தேடி, அவர்களிடம் நாமாகப் போய் சமாதானத்தைப் புதுப்பித்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

4. சமாதானம் இல்லாதவர்களுக்கும் பகிரப்பட வேண்டிய சமாதானம்:

அதாவது இவ்வுலக ஜனத்தொகையில் பெரும்பாலான மக்கள் தங்கள் வீடுகள், பொருட்கள், குடும்பங்களை இழந்து, தங்கள் சமாதானத்தையும் இழந்த நிலையில் உள்ளனர். இந்த பட்டியலில் இந்தியா 147-வது இடத்தில் உள்ளது என்பது மிகவும் வேதனையளிக்கக்கூடிய காரியமே.

சமாதானத்தின் சுவிசேஷம் – நம் தேசத்தில் சமாதானத்தைத் தேடி, இன்னும் கோவில், மலை, ஆறுகளுக்குப் படையெடுக்கின்ற மக்களுக்கு சுவிசேஷத் தைக் கூறுவது யார்? ஆண்டவருடைய அன்பின் நற்செய்தியைக் கூறி, சமாதானம் இல்லாதவர்களுக்கு சமாதானத்தைக் கொடுப்பதே சுவிசேஷ மாகும். நமது ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்து சமாதானத்தையே சுவிசேஷமாகப் பிரசங்கித்தார் (அப்.10:36; எபே.2:17). எனவே, சுவிசேஷம் என்பது சமாதானத்தின் சுவிசேஷமேயாகும். நம் தேசம் சந்திக்கும் சமாதானமின்மைக்கு தீர்வு இந்த சமாதானத்தின் சுவிசேஷம் மட்டுமே. இந்த சமாதான சுவிசேஷத்தைக் கூறுகிறவர்களுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன என்று ஏசா.52:7, ரோ.10:15-ல் வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசு பாலகனாகப் பிறந்தபொழுது, திரள் சேனையான தூதர்கள் வானத்தில் தோன்றி "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், ...என்று தேவனைத் துதித்தார்கள்'' (லூக்.2:14). பூமியின்மேல் சமாதானம் கொடுக்கப்பட்டிருந்தாலும், சமாதானத்தின் காரணரான இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமே இந்த சமாதானம் சென்றடைகிறது. தேவன் நமக்கு சமாதானம் கொடுத்திருக்கிறாரென்றால், அந்த சமாதானத்தை நாம் நிச்சயம் சமாதானம் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.


சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிப்போர் யார்? - ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய வாழ்வில் சந்திக்கும் போராட்டத்தை மேற்கொள்ள மிக அவசியமானது 'சர்வாயுத வர்க்கம்' என்று பவுல் எபே.6:13-17-ல் குறிப்பிடுகிறார். இதில் வசனம் 15-ல் "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்..." என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த 'ஆயத்தம்' என்னும் பாதரட்சையை அணிந்தவர்களாக மெய் சமாதானத்தை அறிந்தவர்களாகிய நாம் அறியாதவர்களுக்கு அறிவிப்பதே உண்மை கிறிஸ்துமஸ் ஆகும். எனவே, இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நாம் நம்மைச் சுற்றியுள்ள நமது நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பகைவர்களுக்கு மட்டுமல்லாமல், இன்னும் கிறிஸ்துவை அறியாதபடி சமாதானம் இல்லாமல் வாழும் நம் தேச ஜனங்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவிக்க ஜெபித்துச் செயல்படுவோம். அதற்கு சமாதானத்தின் தேவன் தாமே நமக்கு இந்த கிறிஸ்து பிறப்புப் பண்டிகையின் நாட்களில் தமது சமாதானத்தினால் நமது உள்ளங்களையும், இல்லங்களையும் நிரப்புவாராக! ஆமென்.

- அருட்திரு. பிரான்சிஸ் ஜெ. சிங்
(ஓய்வு பெற்ற மிஷனரி)

மிஷனரிப் பிரதிஷ்டை



கடந்த 06.11.2022 ஞாயிறன்று துரைசாமியாபுரம்-CSI தூய பவுல் ஆலயத்தில் வைத்து நமது மிஷனரி திருமதி. ஜாய்ஸ் சோபனா, அருட்திரு. நியூட்டன் பால் அவர்களால் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டார். ஜெபத்தாலும் ஈகையாலும் இவரை ஆதரிக்க முன்வந்துள்ள திரு. தேவராஜன் அவர்களின் குடும்பத்திற்காக தேவனைத் துதிப்போம்.



மிஷனரிப் பிரதிஷ்டை

மதுரை, திருமங்கலம் – MUF சார்பாக ஒடிசா மாநிலம், டேங்கானல் பணித்தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனரி திரு. சுரேஷ் மால்தோ 01.10.2022 அன்று நமது மூத்த மிஷனரி Rev. Dr. S. பொன்னுராஜ் ஜேக்கப், மற்றும் Rev. காலேப் ஆகியோரால் பிரதிஷ்டை செய்யப்பட்டார். மிஷனரியை ஜெபித்துத் தாங்குகிற திரு. D. பிரின்ஸ் அருமைராஜ் அவர்களின் குடும்பத்திற்கும், மிஷனரி ஆதரவாளரை அறிமுகப்படுத்திய திரு. பெரியசாமி (MUF) அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிஷனரிகள் பிரதிஷ்டை

23.10.2022 அன்று திண்டுக்கல் CSI-புனித பவுல் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற 10 மிஷனரிகளின் பிரதிஷ்டை ஆராதனையை அருட்திரு. ஸ்டேன்லி ஜெயராஜ் அவர்கள், தேவநாமம் மகிமைப்படும்படி சிறப்பாக நடத்திக்கொடுத்தார்கள். கீழே பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து மிஷனரிகளையும் தாங்கும் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.



ஆதரவாளர் பெயர்	மிஷனரி பெயர்
திருமதி. அகஸ்டி ராபர்ட்	அருட்திரு. முன்னா மொகந்தியர்
திரு. ஸ்பர்ஜன் பால்	திருமதி. கீதா
திரு. ஜோஷ்வா M.	திரு. சந்து மராண்டி
திரு. இன்னாசி துரை A.	செல்வி. ஹன்னா சிங்
திரு. பிரடெரிக் கிருபாகரன்	திருமதி. பெட்ரிசியா தமிழ்ச்செல்வி
திரு. கனராஜ் I.	அருட்திரு. மஞ்சயா நாயக் G.
அருட்திரு. டேனியல்	திரு. லுபின் மூர்மு
திரு. ஞானசேகரன் J.S.	திருமதி. சலோமி ஹன்ஸ்தா
திரு. ராஜாசிங் டேவிட் C.	அருட்திரு. கென்னத் கரியப்பா
திரு. ஜாண் செல்வின் K.	திரு. குமார் V.



விசுவாசிகளின் முதல்முறை கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்



சமூக வலைத்தளங்களும், நவீன தொழில்நுட்ப சாதனங்களும் சமீப காலமாக எல்லோருடைய கரங்களிலும் கூகுல், சுமார்ட் போன், வாட்ஸஅப், யூ டியூப் போன்றவைகள் இன்றியமை யாதவைகளாக மாறிவிட்டன. கடந்த 20 ஆண்டுகளுக்குமுன் தோன்றி, இன்று பட்டிதொட்டியெல்லாம் நுழைந்து விட்டதும் விந்தையே. நவீன உலகத்தில் நயங்காட்டி ஏமாற்றும் வஞ்சகனின் சமூகவலைத்தளங்கள் 2ஜி என்று ஆரம்பித்த வேகம், இன்று 5ஜி அதையும் தாண்டி 6ஜி என மின்னல் வேகத்தில் உலகம் இயங்கி வருகின்ற இத்தருணத்தில், இன்னும் ஒருமுறைகூட இயேசுகிறிஸ்துவின் பிறப்பை அறியாமல் மக்கள் வாழ்வது மிகவும் வருத்தம் அளிக்கிறது. எனவே கிறிஸ்துவை அறியாதோர் அறிந்திட, அறிந்தோர் அறிவித்திட என கடந்து சென்ற மிஷனரிகளுக்காக ஆண்டவரைத் துதிக்கிறோம். இவர்கள் இந்தியாவிலுள்ள எண்ணிலடங்கா கிராமங்களுக்கு மகிழ்ச்சியான கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை ஒவ்வொரு நாளும் சுமந்துசெல்வதோடு, புதிய ஆராதனைக்குமுக்களையும் தோற்றுவிக்கின்றனர். உங்களது ஊக்கமான ஜெபமே இம்மாபெரும் பணியைச் செய்ய ஊக்கம் தருகிறது.

உத்தராகண்ட் மாநிலம் நனக்மட்டா பணித்தளம் 2021-ம் ஆண்டு ஆகஸ்ட் 4-ம் தேதி தொடங்கப்பட்டது. இங்கே ராய்சீக் இனமக்கள் கிறிஸ்துவை அதிகமாக ஏற்றுக்கொண்டு வருகிறார்கள். தியுதி மற்றும் இஸ்ஸாம் நகர் ஆகிய இரண்டு கிராமங்களிலிருந்து முதல் முறையாக திரு. சத்வீந்தர் சிங், பல்ஜீந்தர் சிங் ஆகிய இரண்டு குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துமஸ் கொண்டாடி மகிழ்ந்தனர். தியுதி கிராம திரு. சத்வீந்தர் சிங் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு சர்க்கரை நோயின் அளவு அதிகமாகி மூன்று முறை அவர் மரணப்படுக்கையில் இருந்தார். இக்கொடிய மரண உபாதையிலிருந்து விடுதலையாக மந்திரவாதிகளிடம் சென்று பூஜை செய்தும் லட்சக்கணக்கில் செலவு செய்தும் பயனில்லை. அவரது பூஜை மற்றும் நம்பிக்கை எல்லாம் தோல்வியில் முடிந்து, அவர் தொடர்ந்து மரணப்படுக்கையிலேயே இருந்தார்.

கடந்த 2021-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நமது மிஷனரிகள் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க அவர்களுடைய கிராமத்திற்குச் சென்றனர். அப்பொழுது அவருடைய மனைவி பல்ஜீத் கௌர் நமது மிஷனரிகளை அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்று தங்களுடைய பிரச்சினைகளை அவர்களிடத்தில் சொன்னார்கள். நமது மிஷனரிகள் கிறிஸ்துவையும் அவர் பிறந்த மீட்பின் நோக்கத்தையும் கூறினர். அவர்கள் நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்; எங்களுக்கு விடுதலை வேண்டுமென்று சொல்லி ஜெபித்தார்கள். அடுத்த இரண்டு வாரமும் ஞாயிறன்று அவர்கள் வீட்டிற்கு மிஷனரிகள் சென்று ஞாயிறு ஆராதனை

நடத்தினார்கள். அப்பொழுது அவர்கள் முழு குடும்பமாக இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். உடனே தேவன் அவர்களுக்கு சுகவிடுதலையைக் கொடுத்தார். அவர்கள் 'இயேசுகிறிஸ்துவே, மெய்யான தெய்வம்!' என்று அவர்கள் நாவினால் அறிக்கையிட்டனர்.

வாழ்க்கையிலே முதல்முறையாக கடந்த 2021-ம் ஆண்டு டிசம்பர் 25-ம் தேதி கிறிஸ்மஸ் தின விழாவை அவர்கள் குடும்ப மாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். அவர்கள் குடும்பத்தின் மூலமாக அந்த கிராமத்தில் அநேகர் கிறிஸ்துவை அறிந்துகொண்டு வருகிறார்கள். இக்குடும்பம் இந்த நனக மட்டா பணித்தளத்தின் முதல் விசுவாசி குடும்பமாகும். அதேப்போல் ராஜஸ்தான் மாநில அஜீத்கார் பணித்தள கன்வன்ட் மற்றும் அஸ்புரா கிராம மக்கள் மத்தி யிலும் முதல்முறை கிறிஸ்துமஸ் 2021-ல் கொண்டாடப்பட்டது. இப்படிப்பட்ட முதல் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் கிராமங்கள்தோறும் தொடர்ந்து நடைபெற அங்குள்ள மக்களுக்கு கிறிஸ்துவை பரிசாகக் கொடுக்க முற்படும் மிஷனரிகளுக்காக ஜெபிக்க மறவாதீர்கள். அநேக வெளிநாட்டு மிஷனரிகள் நமக்கு இந்த கிறிஸ்துவை பரிசாக அளித்திருக்காவிட்டால், நம்மிடம் இந்த கிறிஸ்துவோ அல்லது கிறிஸ்துமஸ் என்ற கொண்டாட்டமோ காணப்பட முடியாது. ஆகவே, தங்கள் வாழ்நாளில் முதல்முறையாக கிறிஸ்துமஸ் கொண்டாட இருக்கும் நமது முதல் தலைமுறை விசுவாசிகளுக்காக தேவனைத் துதிப்போம். அத்துடன் கிறிஸ்துவின் முதல் வருகையைக் கொண்டாடும் நாம், நமது கொண்டாட்டங்களில் எதிர்ப்பினிமித்தம் இவ்வருட கிறிஸ்துமஸை திருச்சபையாகக் கூடி கொண்டாட இயலாமலிருக்கும் விசுவாசிகளையும் நமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.

- சகோ. சைமர் செல்வின்

மகிமைக்குள் பிரவேசித்தார்



நாகர்கோவில் ரூரல் பணி மாவட்டம், கிறிஸ்டோபர் நகரைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் (வயது-68) அவர்கள், கடந்த 01.11.2022 அன்று தேவமகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் சுமார் 34 ஆண்டுகளாகக் குடும்பமாக நமது ஊழியத்தில் ஈடுபாடு கொண்டவர். இவர்கள் ஜார்க்கண்டிலுள்ள குப்பி பணித்தளத்தில் ஒரு ஆலயம் கட்டித் தந்துள்ளதோடு, ஒரு மிஷனரி மற்றும் குழந்தை ஆதரவாளராகவும் நமது ஊழியத்தைக் காணிக்கையாலும், ஜெபத்தாலும் தாங்கி வந்துள்ளார்கள். இவர் பணித்தள விஜயம், மாநில முகாம் மற்றும் அனைத்து ஜெபக்கூடுகை களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 7 ஆண்டுகளாக அணையா தீபம் ஜெபத்தின் ஜெப ஒருங்கிணைப்பாள ராகவும், நமது இயக்க E.C. உறுப்பின ராகவும் 2018 முதல் 2021 வரை தனது ஊழியத்தை நிறைவேற்றினார். இவரது பெற்றோர் நிறைவேற்றின ஊழியத்தை இவர் தனது பகுதியில் நிறைவேற்றியதுபோல இனி இவர் செய்ததை இவரது மனைவி, பிள்ளைகள் செய்வார்கள். இவரைப் பிரிந்து வாடும் இவரது மனைவி திருமதி. றோஸ் ஜெய குமாரி மற்றும் பிள்ளைகளின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.

மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திருவள்ளூர் மாவட்ட கௌரவ முன்னேற்றச் செயலரான திரு. M. ஜான் தேவசகாயம் அவர்கள், கடந்த 02.01.2022 அன்று தேவமகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் நமது ஊழியங்களுக்காக உதாரத்துவமாகக் கொடுத்து, குழந்தை மற்றும் மிஷனரி ஆதரவாளராகவும், ஜெபக்குழுக்களை நடத்துபவராகவும் செயல்பட்டார். இவரது வாழ்விற்காய் தேவனைத் துதிப்போம்.



சென்னை – அயன்புரம் பகுதி கௌரவ விரிவுப்பணி செயலரான திரு. E. அம்புரோஸ் அவர்கள், கடந்த 20.06.2022 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் 1983-ம் ஆண்டு முதல் நமது இயக்கத்தில் இணைந்து திருவள்ளூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு இயேசுவின் அன்பை எடுத்துக்கூறி, மிஷனரித்தரிசன பாரத்தை ஏற்படுத்தி, இப்பணியினைச் செய்திட அநேகரை ஊக்கப்படுத்தியுள்ளார். தொடர்ந்து அப்பகுதியில் நமது ஊழியம் சிறப்பாக நடைபெற தலைவர்களை உருவாக்கி வழிநடத்தியுள்ளார். இவரது மகள் மற்றும் மகன் குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.



கடலூர் மாவட்ட ஜெபக்குழுத்தலைவரான திரு. மு. செல்லதுரை அவர்கள், கடந்த 21.08.2022 அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்கள். இவர் வருடந்தோறும் பணித்தள விஜயத்தில் பங்கேற்பதோடு, அந்த மாவட்டத்தில் ஜெபக்குழுத்தலைவர்கள், ஜெபக்குழுக்களை உருவாக்கினார். இவர் செய்த ஊழியத்தை இப்போது அவர்களது மூத்த மகன் தொடர்ந்து செய்கிறார். இவரது மனைவி மற்றும் மகன்களின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.



கோயம்புத்தூர், கவுண்டம்பாளையம் பகுதி ஜெபக்குழுத்தலைவரும் ஆதரவாளருமான திரு. ராஜன் அவர்களின் அன்பு மனைவி திருமதி. பிரேமா ராஜன் அவர்கள், சுகவீனத்தினிமித்தம் கடந்த 22.10.2022 அன்று தேவமகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர்கள் குடும்பமாகக் கடந்த 30 வருடங்களாக நமது ஊழியத்தில் பலவகைகளில் ஆதரவு காட்டி வருகின்றனர். இவரைப் பிரிந்து வாடும் இவரது கணவர், பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.

ஆலயப்பிரதிஷ்டை - ஜார்க்கண்ட்



திருவள்ளூர், திருநின்றவூர் பிராந்தியம், செவ்வாப்பேட்டை பகுதியைச் சார்ந்த திரு. S. பிரசாந்த் மற்றும் திரு. D. பென்னிங்டன் அவர்களின் சார்பாக ஜார்க்கண்டிலுள்ள சுந்தர்பஹாடி பணித்தள கிராமத்தில் கட்டப் பட்டுள்ள ஆலயத்தைக் கடந்த 01.05.2022 அன்று பிரதிஷ்டை செய்ய தேவன் எங்களுக்கு உதவி செய்தார். இப்புதிய ஆலயப்பிரதிஷ்டை விழாவில் நாங்கள் 8 பேராக கலந்துகொண்டோம். சுமார் 300 விசுவாசிகள் மற்றும் மிஷனரிகள் எங்களை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். 15 வருடங்களாக இந்த ஆலயத்தைக் கட்டுவதற்கு நிலம் கிடைக்காமல் மாட்டுக்கொட்டகையில் ஆண்டவரை ஆராதித்து வந்த சூழ்நிலையில், ஏழை பெண் விசுவாசியொருவர் இந்த ஆலயத்தைக் கட்டுவதற்கு இடம் கொடுத்தார் என்று கேள்விப்பட்டப்போது, இந்த மிஷனரிப்பணிக்கென்று மேலும் ஜெபிப்பதற்கும், கொடுப்பதற்கும் தீர்மானிக்க தேவன் எங்களை வழிநடத்தினார். தேவனுக்கே மகிமை!

ஆவடி - பணித்தள விஜயமும், ஆலயப்பிரதிஷ்டையும்



ஆவடி பிராந்தியத்திலிருந்து 10 பேராக அடங்கிய குழுவாக நாங்கள் 13.09.2022 அன்று சென்னையிலிருந்து ஜார்க்கண்ட் சென்றடைந்தோம். அங்கு நாளா பணித்தள கைராபானி சிறுவர் விடுதிப் பிள்ளைகளின் சிறப்பு நிகழ்ச்சியைக் கண்டுகளித்து, பின்பு அப்பணித்தளத்திலுள்ள சந்தால்டி கிராமத்தில் திரு. பீட்டர் குடும்பத்தினர் சார்பாகக் கட்டப்பட்டுள்ள புதிய ஆலயத்தை அக்குடும்ப உறுப்பினர் திரு. பீட்டர் ஆனந்த் அவர்கள் முன்னிலையில் பாஸ்டர். பால் அருமை நாயகம் அவர்கள் ஜெபித்து, பிரதிஷ்டை செய்த ஆராதனையில் கலந்துகொண்டோம். அதன்பின் நமது தும்கா மண்டல பல்நோக்கு மையத்தில் வைத்து நமது மிஷனரிகளின் மூலம் பணித்தளங்களில் தேவன் நிகழ்த்தி வரும் செயல்களையும், பின்னர் மசிலியா பணித்தளத்தில் நடைபெற்ற உறத்தியா பத்தர் ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு, கைராபானிக்குச் சென்று அங்குள்ள பணித்தள அனுபவங்களையும் கேட்டறிந்து பணித்தள தேவைகளுக்காக ஜெபித்துவிட்டு சென்னை திரும்பினோம். நமது மிஷனரிகளின் அர்ப்பணிப்பும், விடுதிப்பிள்ளைகளின் கல்வித்திறன், ஒழுக்கம் மற்றும் புதிய விசுவாசிகளின் உற்சாகமும் எங்களை மேலும் இந்த கனமான ஊழியத்தில் அதிகமாய் ஈடுபட தூண்டுகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

மதுரை - பணித்தள விஜயம்



மதுரை பிராந்தியத்திலிருந்து 15 பேராக கடந்த 20.09.2022 அன்று புறப்பட்டு, உத்தரப்பிரதேச ஜான்சிக்குச் சென்று, அங்குள்ள சிப்ரியில், புந்தேல்கண்ட் பிராந்திய மிஷனரிகளோடு இணைந்து ஜெபித்தோம். பின்பு ஜான்சி சிறுமியர் விடுதிப்பிள்ளைகள் மனன வசனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தி விட்டு, அங்குள்ள மிஷனரிப்பயிற்சி மையத்தில் நடைபெற்ற மிஷனரிகள் பட்டமளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். பின்னர் டப்ரா மற்றும் மோட் பணித்தளங்களுக்குச் சென்று, விசுவாசிகளுடன் இணைந்து ஜெபித்து தேவனை ஆராதித்தோம். ஆண்டவர் இன்னும் பல மிஷனரிகளை எழுப்பித்தர வேண்டும் என்று பாரத்துடன் ஜெபிக்கத் தீர்மானித்தவர்களாய் மதுரை வந்து சேர கிருபை செய்த தேவனைத் துதிக்கிறோம்.

செங்குன்றம் - ஜம்மு பணித்தள விஜயம்



செங்குன்றம் ஜெபக்குழுவிலிருந்து 11 பேராக கடந்த 30.09.2022 அன்று புறப்பட்டு, ஜம்முவிலுள்ள கோட்லி கிராம பட்வால், பகத் ஆகிய இனமக்களைச் சந்தித்து அவர்களுக்காகவும், எதிர்ப்புகள் அதிகமாக இருக்கிற இப்பணித்தளங்களுக்காகவும் ஜெபிக்கும் பாரத்தை நாங்கள் பெற்றுகொண்டோம். பின்பு உதம்பூர் பணித்தள டுபீல் கிராமம் சென்று, அங்குள்ள வால்முகி மாரோ, சமியார் மற்றும் ஜாட் மக்களினங்களைச் சந்திக்கவும், அவர்கள் மத்தியில் நடக்கும் ஊழியங்களைக் கேட்டறியவும் ஆண்டவர் உதவி செய்தார். பின்பு ஆர். எஸ். புரா, கதுவா, அக்னூர் பணித்தளங்களுக்குச் சென்று, அங்கே நமது ஊழியத்திற்கு நக்சலைட்ஸ்டுகள் அதிக தடையாக இருப்பதை அறிந்தோம். மற்றும் பசோலி பணித்தளத்திலுள்ள மாசா, முஸ்லிம், சமியார் மக்களினங்களைச் சந்தித்து, மலைகளில் சென்று சுவிசேஷம் அறிவிக்கும் நமது மிஷனரிகளின் சவால்களுக்காகவும், பாதுகாப்புக்காகவும், எதிர்ப்புகள் மறையவும் நாம் ஜெபிக்க வேண்டும் என்ற பாரம் பெற்றோம். அதன்பின் ராம்கடு, சம்பா, நரோத் பணித்தளங்களைப் பார்வையிட்டு, அங்குள்ள மக்கள் மத்தியில் நடைபெறும் வீட்டு ஆராதனைகளில் பங்குப்பெற்றோம். மேலும் நரோத் பணித்தளத்தில் ஒரு ஆலயம் கட்டிக்கொடுக்க அந்த உபவாச ஜெப நாளில் நாங்கள் பாரம்பெற்றோம். தேவன்தாமே எங்கள் பிரயாணம் அனைத்திலும் பாதுகாப்பைத் தந்தார்.

வடசென்னை - பணித்தள விஜயம்



நாங்கள் தாங்கும் மத்தியப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு 23 நபராக கடந்த 06.10.2022 முதல் 7 நாட்கள் என அங்குள்ள சாங்வி விடுதிக்குச் சென்று அங்கு ஒருநாள் உபவாச ஜெபத்தை ஏறெடுக்க கர்த்தர் உதவி செய்தார். சென்ற அனைவரும் வயது மூத்தவர்களாயினும் தேவன் நற்பாதுகாப்பை அருளி, அவ்விரு மாநிலங்களிலுள்ள பணித்தளங்களையும் பார்வையிட கிருபை செய்தார். அங்கு ஒருசில கிராமங்களில் ஆலயம் கட்டுவதற்கான தேவையை உணர்ந்தோம். வரும்நாட்களில் எங்கள் குழுவினர் மூலம் தேவன் ஆலயம் கட்ட உதவி செய்வார் என விசுவாசிக்கிறோம். ஜெபித்துகொள்ளுங்கள்.

செங்குன்றம் – ஒடிசா பணித்தள விஜயமும், ஆலயப்பிரதிஷ்டையும்



சென்னை செங்குன்றத்திலிருந்து 15 பேராக கடந்த 19.10.2022 அன்று புறப்பட்டு, ஒடிசா மாநில ஜெசிப்பூர் தாலுகாவின் சாக்டி பணித்தளத்திற்குச் சென்று, துல்கிபாடா கிராம சபையின் 4-வது ஆண்டுவிழாவில் பங்கேற்றோம்; அங்குள்ள விசுவாசிகளின் பக்தியும், வழிபாட்டு ஒழுங்கு முறையும், ஈடுபாடும் எங்களை வியக்க வைத்தது. பின்பு சாக்டி பணித்தள விடுதியிலுள்ள 130 குழந்தைகளின் கல்வித்திறனையும், நல்ல பழக்க வழக்கங்களையும் கண்டு தேவனுக்கு நன்றி கூறினோம். பின்பு டொங்கபானி கிராம வீட்டுச்சபையின் ஆராதனையில் பங்குப்பெற்று, அம்மக்கள் மத்தியில் விரைவில் ஆலயம் கட்டப்படவும், சொன்னமாரா கிராம சபையில் சபையாருடன் சேர்ந்து கர்த்தரை ஆராதித்து, அந்த ஆலயம் முழுமையாகக் கட்டிமுடிக்கப்படவும் நாங்கள் குழுவாகக்கூடி ஜெபித்தோம். பின்பு 25.10.2022 ஞாயிறன்று குமாரியில் திரு. சாம் சுயம்பு மற்றும் திரு. பாபு அவர்கள் மூலம் கட்டப்பட்ட ஆலயப்பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டு, செனராடி கிராம சபையில் விசுவாசிகளுடன் தேவனை ஆராதித்தோம். பின்பு நமது மிஷனரிகளுடன் சேர்ந்து சாக்டி ஆலயத்தில் நடந்த உபவாசக்கூடுகையில் பங்குப்பெற்று, கிரஹாம் ஸ்டெய்ன்ஸ் மருத்துவ மனை, வீடு, ஆலயம் மற்றும் கல்லறையைப் போய் பார்வையிட்டு, அம்மாநில மக்களுக்காக மனதுருகி ஜெபித்து ஊர் திரும்பினோம்.

சென்ற மாத இதழில் பக்கம் எண்: 9-லுள்ள இப்பகுதியைத்திருத்தி வாசிக்கவும்

நமது மிஷனரி திருமதி. லீலாபாய் ராஜேந்திரன், ஆத்தூர் என்ற கிராமத்தில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். இவர் 11.10.2022 அன்று உணவு அருந்தமுடியாமலும், எதையும் விழுங்கமுடியாமலுமிருந்த நிலையில் கல்யாணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகையில், தன் சுயநினைவை இழந்தார். பின்பு 14-ம் தேதி இரவு மூச்சுத்திணறல் ஏற்பட்டு, கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என திருத்தி வாசிக்கவும்.

செங்குன்றம் – ஹிமாச்சல் பணித்தள விஜயம்



சென்னை திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம் பகுதியைச் சார்ந்த 11 பேர் கடந்த 20.10.2022 அன்று புறப்பட்டு, ஹிமாச்சலப்பிரதேசத்திலுள்ள ரோஹ்ரு பணித்தள ஜல்வாடி கிராம சுனில் அவர்களது வீட்டில் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு, தேவசெய்தியுடன் மெய்சிலிர்க்க வைக்கும் விசுவாசிகளின் சாட்சிகள்ளை கேட்க தேவன் கிருபை செய்தார். பின்பு ராம்பூர் பணித்தள தக்லேஜ் கிராமத்தில் உபவாச ஜெபம் மேற்கொண்டு, அங்குள்ள மிஷனரிகள் பகிர்ந்துகொண்ட ஜெபக்குறிப்புகளுக்காக ராம்பூர் LTI-ல் கூடி மிஷனரி குடும்பங்களும் நாங்களும் பாரத்தோடு ஜெபித்தோம். பின்னர் ரிகாங்பியோ பணித்தள கவுண்ட கிராம பகல்நேரக்கூடுகையில் தேவசெய்தி மற்றும் சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டு, அங்குள்ள சிறுபிள்ளைகளுக்கு புதியபாடலைக் கற்றுக்கொடுத்தோம். பின்பு மிஷனரிகள் கூறிய ஜெபக்குறிப்புகளுக்காக அனைவரும் கூடி ஜெபித்தோம். அதன்பின் தானேதார் பணித்தளத்திலுள்ள சாதுசுந்தர்சிங் குகைக்குச் சென்று, அங்கு அவர் ஜெபித்த இடத்தில் நாங்களும் மிஷனரியுடன் பாரத்தோடு ஹிமாச்சல் பகுதிக்காக ஜெபித்தோம். பின்பு தலைநகர் சிம்லாவிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க நூற்றாண்டு பழமை வாய்ந்த CNI கிரைஸ்ட் ஆலயம் சென்று ஜெபிக்கவும் கிருபை ஈந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

கன்னியாகுமரி – பணித்தள விஜயமும், ஆலயப்பிரதிஷ்டையும்



குஜராத் மாநில சஹயாத்ரி பிராந்தியத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட 16 பேராக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள களியக்காவிளையிலிருந்து 21.10.2022 அன்று புறப்பட்டு, குஜராத்திற்கு சென்றோம். கான்வெல் பணித்தளத்திலுள்ள கட்சிச்சிலா ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு, அதன்பின் தாபிலோனா ஆலயப்பிரதிஷ்டையிலும், அதைத்தொடர்ந்து ராண்தா, பலாண்டி கிராம இரவு ஜெபக்கூடுகைகளில் கலந்துகொண்டோம். பிப்பள்வாடா சிறுமியர் விடுதி மற்றும் புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளியைப் பார்வையிட்டு, கீலிபானி பணித்தள கடம்பா கிராம இரவு ஜெபக்கூடுகையிலும், அஹ்வா பணித்தள அம்தவா, சாக்கர்பாத்தல் பணித்தள துல்சோன்டு மற்றும் வகை பணித்தள அம்கர்வானா ஆலயக்கூடுகைகளிலும் கலந்துகொண்டோம். பின்பு உமர்காம் பணித்தள மதுபன் ஆலயத்தில் நடந்த இரவு ஜெபக்கூடுகையில் கலந்துகொண்டு எங்களது ஊர் திரும்பினோம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. நிஷா மாங்வெய் ஃபோம்

ஜம்மு

பசோலி:

சுர்காா் ரமேஷ்பாய் &
கவித் சுனிதாபேன்;
சுபானி & எமி பாக்கியா

துதிக்க: சுவிசேஷம் 5 கிராமங்களில் முதல் முறையாகப் பகரப்பட்டுள்ளது. 7 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 12 இரவுநேர ஜெபக்கூடுகைகளும், 6 ஊழியத்திரைப்பட நிகழ்ச்சிகளும், 2 தேடுவோர் முகாம்களும், 4 சிறுவர் முகாம்களும் மற்றும் 2 வாலிபர் முகாம்களும் நடத்தப்பட்டுள்ளன. ஒரு வேதாகமமும், 50 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. ராகேஷ் தீய ஆவியின் கட்டிலிருந்து விடுபட்டுள்ளார். முகமத் குரேம் சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும், குல்தீப் கல்லீரல் நோய்த் தொற்றிலிருந்தும் சுகம் பெற்றுள்ளனர். நமது விசுவாசிகள் தங்களது குடும்பத்தாரோடு சேர்ந்து சுவிசேஷப்பணியில் உதவிபுரிகின்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சிறுவர் வேதாகம வகுப்புகளில் பங்கேற்கும் சிறுபிள்ளைகளும், அவர்கள் மூலம் அவர்களுடைய பெற்றோர்களும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சுவிசேஷத்தை எதிர்ப்போர் இயேசுவின் அன்பை உணர; ருஷ்தம் சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும், சோனு பக்க வாதத்திலிருந்தும் சுகமடைய; ராஜ்ய விந்தரின் குடும்பத்திற்கு குழந்தை பாக்கியம் அருளப்பட ஜெபிப்போம்.

படைத்தவர் பணியச் செய்தார்!

மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளம். பம்லாபாத் கிராமத்தில் வாழும் நமது பெண் விசுவாசி புர்கி பாயின் பசுமாடு கன்று ஈன மிகவும் கஷ்டப்பட்டது. பின்பு ஜெபத்திற்குப்பின் சுகமான கன்றை ஈன்றெடுத்தது. ஆனால், புர்கியின் குடும்பத்தார் அனைவரும் கவலைப்படும்படி அப்பசு தனது கன்றைப் பால் குடிக்க சிறிதும் அனுமதிக்காமல், அதை எட்டித் தள்ளியது. அது மாத்திரமல்ல, குடும்பத்தாரையும் அப்பசு பால் கரக்க அனுமதிக்கவில்லை. இந்த நிலை 2 நாட்களாக நீடித்தது. ஆயினும், பசு தனது முரட்டுத்தனத்திலிருந்து மாறியபாடில்லை. சில பூஜை சடங்காச்சாரங்களைச் செய்தால் இந்நிலை மாறும் என மந்திரவாதியொருவன் கூறினான். அதற்கு புர்கிபாய், "எங்கள் ஆண்டவர் உலகிலுள்ள அனைத்தையும் படைத்தவர். இந்த பசுவையும் அவரே படைத்தார். எனவே, அவரே இப்பசுவை சுகநிலைக்கு மீண்டும் கொண்டுவருவார்" என தைரியமாகக் கூறினார். பின்பு பசுவிற்காக ஊக்கமாக ஜெபித்தார். அதன்பின் தனது மகளிடம் பசுவிடம் சென்று பால் கரக்கச் சொன்னார். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக, பசு மிகச் சாதுவாக நின்று பால் கொடுத்தது. அந்நேரம் முதல் அது தனது கன்றிற்கும் தொடர்ந்து பால் ஈந்தது. அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண்சன் ராஜதுரை
திருமதி. புஸாரே ஷைலா சிந்தாமன்
திரு. தாங்பியாக்முவான்
திருமதி. அனாமிகா பெகு

சாம்பா:
டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

துதிக்க: சுவிசேஷத்தின் மூலம் 800 பேர் ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். 4 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. 4 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 15 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டா கிராமத்திலிருந்து 2 புதிய குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டுவதோடு, அங்கே புதிதாக ஆரம் பிக்கப்பட்டுள்ள நமது ஆராதனைக் குழுவிலும் பங்கேற்கின்றனர். நமது விசுவாசிகள் யாவரும் தொடர்ச்சியாக வேதாகம வகுப்புகளில் கலந்து கொள்கின்றனர். ஜோயல் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். நீலம் முதுகுத்தண்டுவட பிரச்சினை யிலிருந்து சுகமடைந்துள்ளார். நமது விசுவாசிகள் அவர்களது கிராம மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பதில் முனைப்பு காட்டி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரெடியான் கிராம நமது விசுவாசிகளும், சபை மூப்பர்களும் சாம்பா பகுதி ஊழிய வளர்ச்சியில் நல்ஆதரவு காட்ட; சுங்வாலி கிராம சபை மூப்பர்கள் எதிர்ப்புகளின் மத்தியிலும் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து நிற்க; சாம்பா மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷத்திற் கான வாய்ப்புகள் கிடைக்க; குல்தீப் தீய ஆவியின் பிடியிலிருந்து மீட்கப்பட; ரோஷன் அதிகப்படியான தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்து சுகம் பெற; ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்ள தீப்பு தேவிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அவரது வீட்டார் அவர்மூலம் கிறிஸ்துவின் அன்பைக் கண்டுகொள்ள; ராக்கா மற்றும் தூந்த் கிராமங்களிலுள்ள நமது பின்மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; சத்வால், மாங்லூர், பர்க்வால், மாவா ஆகிய கிராமங்களிலிருந்து நமக்குப் புதிய தொடர்பாளர்களும், சுவிசேஷத்திற்கு நல்வரவேற்பும் கிடைக்க; சாம்பா பகுதி யில் ஞாயிறு ஆராதனை நடத்தத் தகுந்த இடம் அமைய; சுங்வாலி மற்றும் ரெடியான் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட ஏற்ற நிலங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

எதிர்ப்போரும் வேண்டிடுவர்!

மத்தியப் பிரதேசம். நேப்பாநகர் பணித்தளம். சொர்பிர்யுவின் ஒரு வயது மகனை தேள் கொட்டியதால், அவன் மிகவும் கவலைக்கிடமானான். முன்பு பம்லாபாத் கிராமத்தில் நமது ஊழியத்தை அதிகம் எதிர்க்கும் பெண், இந்த சொர்பியு. ஆனால் தற்போது தன் மகனிருக்கும் ஆபத்தான நிலையைக் கண்டு, அவர்கள் குடும்பமாக நமது விசுவாசி ராம்காளியின் வீட்டிற்கு முன்நின்று நடந்ததைக் கூறி, மகனுக்காக ஜெபிக்கும்படி கண்ணீருடன் வேண்டினர். ராம்காளியும் பிறவிசுவாசிகளும் கூடி சிறுவனுக்காகப் பாரத்துடன் ஜெபித்தனர். தேவன் சிறுவனைக் குணமாக்கினார். அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பியூலா அன்ன சாந்தினி பிரைட்

ஹிமாச்சலப் பிரதேசம்

ஜியோரி:

ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்

துதிக்க: புதிதாக 112 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. முதல்முறையாக 2 கிராமங்களுக்குச் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. தீய ஆவியின் பிடியினால் உண்டான பயத்தினிமித்தம் கஷ்டப்பட்டு வந்த ஹரீஷ் பூரண சுக மடைந்துள்ளார். 7 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் தடையின்றி நடை பெற தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது மிஷனெரிகளான திரு. ஜம்கோன்காம் ஹயோகிப் யூரிக் அமிலப் பிரச்சினையிலிருந்தும், அவரது மனைவி காது நோய்த்தொற்றிலிருந்தும் முழு சுகமடைய; குடிப்பழக்கத்திற்கும், தீய நண்பர்களின் சகவாசத்திற்கும் அடிமைப்பட்டுள்ள நமது விசுவாசிகளின் குடும்ப அங்கத்தினர்கள் அந்த தீயப் பழக்கங்களிலிருந்து முற்றிலுமாய் விடுபட; மீரா, ஹிராலால், இவான், ஷோபா மற்றும் சேத்திரியின் மகன் தங்களுக்கான நீதிமன்ற வழக்குகளிலிருந்து மீள; பிரசவத்திற்குக் காத்திருக்கும் நமது விசுவாசிகளுக்கு சுகப்பிரசவம் அருளப்பட; அஜய்போரின் குடும்பத்தினர் மனநோய்ப்பிரச்சினையிலிருந்தும், அஞ்சனா வலிப்பு நோயிலிருந்தும், சந்திரகலா நடக்கமுடியாமை மற்றும் உடல்வலியிலிருந்தும், ஷியாம் சிங் 2 வருடங்களாக அடிக்கடிவரும் அதிகப் படியான பெலவீனத்திலிருந்தும், சுஷீலா மூட்டுவலி மற்றும் மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

ரிகாங்பியோ:

பப்லு பரசேத் & கல்பனா மாலிக்; சங்கர் A. & ரூத் மேரி

துதிக்க: முதன்முறையாக 11 கிராமங்களில் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 3 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். யமுனா, சுரேஷ், சசிகுமார், ராஜ்குமாரி, இந்திரஜித் மற்றும் பாபா காஷியின் குடும்பத்தினர் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டுவதோடு, அதில் கூறப்படும் சத்தியத்திற்கும் செவிசாய்க்கின்றனர். புதிதாக 528 பேர் சத்திய வசனத்தைக் கேட்டறிந்துள்ளனர். அரசாங்க மருத்துவரான பிரத்திவா சுவிசேஷத்தை அறிந்து கொண்டதோடு, தனக்காக ஜெபித்துக்கொள்ளும்படியும் கேட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசிகளான மோகன், ரவி மற்றும் அசோக்கிற்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்க; நமது புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்தில் வளர்ந்தேற; சுவிசேஷத்தை எதிர்க்கும் ஓதேஷ், ஈஸ்வர்லால், மகேஷ்வர், முன்னு மற்றும் நாம்கேல் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க; நமது விசுவாசியான சுனிதாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.



ராம்பூர்:

தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

துதிக்க: சுவிசேஷம் 863 பேருக்கு புதிதாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. 4 வேதாகமங்களும், 16 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. 9 இடங்களில் சுவிசேஷ திரைப்பட ஊழியமும், 3 இடங்களில் ஆத்தும ஆதாயக் கூடுகைகளும் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன. புதிதாக 3 பேர் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். ஜெபத்தின் வாயிலாக ரேகா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட்டுள்ளார். கடந்த 20 வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் IPH-ல் பணிபுரிந்துவந்த டுட்டு கிராம சுனில் தற்போது பணிநிரந்தரம் பெற்றுள்ளார். வித்யாசாகருக்கு கண் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து முடிந்துள்ளது. பூல் மாயா கடும் வயிற்றுவலியினால் அவதிப்பட்டபோது, அவரது கணவரும் பிள்ளைகளும் சேர்ந்து ஜெபித்த ஜெபத்தினால் அவர் பூரண சுகமடைந்துள்ளார். பயத்தின் பிடியிலிருந்து தேவன் சந்தோஷை விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: சாரி கிராம சுஷ்மா விசுவாசத்தில் மேலும் உறுதியாக வளர; விமலா தேவி பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து முற்றிலுமாய் விடுபட; இரவில் சரியாகத் தூங்க இயலாமல் கஷ்டப்படும் பிரஸ்தி தேவி நன்கு சுகமாய் நித்திரை பண்ண ஜெபிப்போம்.

பஞ்சாப்

மோகா:

ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி

துதிக்க: தென்னிந்தியப் பகுதியிலிருந்து நமது வடஇந்திய மிஷனெரிப் பணித்தளங்களைப் பார்வையிட சென்ற ஒரு குழுவினர் நமது மிஷனெரிகளோடு சேர்ந்து நடத்திய ஜெப ஐக்கியம், மிஷனெரிகளுக்கு மிகுந்த ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு கிராமத்தில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சரண்தாஸ் தீராத வயிற்றுவலியிலிருந்து சுகம் பெற்றுள்ளார். சுவிசேஷத்தைக் கேட்ட பூஜா இயேசுகிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். தீய ஆவியின் பிடியிலிருந்து குர்ஜீத் கௌர் விடுவிக்கப்பட்டுள்ளார். 350 நபர்கள் முதன்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். ஜோதி, குர்மாயில் கௌர், ராணி, பிரவீன் கௌர், ராஜீ மற்றும் சரண்ஜீத் பல்வேறு பெலவீனங்களிலிருந்து ஜெபத்தின்மூலம் நற்சுகமடைந்துள்ளனர். நமது விசுவாசியான நீட்டுவிற்கு கிறிஸ்தவ வாழ்க்கைத்துணை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொள்ளாமல் இருக்கும் நமது விசுவாசிகளும், விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்திருப்போரும் மீண்டும் ஆராதனைக்கு வரத் தொடங்க; அஜித்வால், ஜலலாபாத், சட்சக், ராய்கோட், கோட்லி, தரம்கோட், போபாரா, பிந்தர்கலன், கிஷான்புரா, ஜக்ரோன், சிதக், துடிக்கி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வாசல்கள் திறக்கப்பட; குடிப்பழக்க அடிமைத் தனத்திலிருந்து சரண்ஜீத் சிங் விடுதலை பெற; ரீஜா, ரிக்கி, ராசன், ஹர்பிரீத் கௌர், மம்தா ரிஜியன், சீமா ஆகியோருக்கு மழலை பாக்கியங்கள் அருளப்பட; நமது ஊழியத்தை மேலும் விரிவுப்படுத்தத் தகுந்த தன்னார்வ ஊழியர்களும், துணை மையமொன்று திறக்கத் திட்டமிட்டிருக்கும் புட்டாரில் நமக்கு ஊழியத்தைச் செய்ய நல்லதொரு அர்ப்பணிப்புள்ள சுதேச ஊழியரும் கிடைக்க; மால்கா சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும், குர்மீத் கௌர் வயிற்றுக்கட்டி பிரச்சினையிலிருந்தும், ரமேஷ் புற்றுநோயிலிருந்தும், சல்மா அடிக்கடிவரும் வலிப்புநோய் பிரச்சினையிலிருந்தும், ராமன்தீப் கௌர், ஜஸ்பிந்தர் சிங் மற்றும் மன்ஜீத் கௌர் பக்கவாதநோய் பிரச்சினையிலிருந்தும் பூரண குணமடைய; குர்ஜீத் கௌர், கல்ஜீத், பிளஸ்ஸி ஆகியோர் தீய ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட; காஞ்சனிற்கு தகுந்த கிறிஸ்தவ வாழ்க்கைத்துணை அமைய ஜெபிப்போம்.



புத்லாடா பிராந்தியம்:
ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

துதிக்க: புத்லாடா பணித்தளத்தில் வைத்து நடைபெற்ற விசுவாசிகள் கூடுகையில் ஏறத்தாழ 2000 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். சின்னி கிராம ஜக்சிர் சிங் தனது தலைப்பகுதியில் மின்னதிர்வு ஏற்பட்டபோதும், ஆபத்து ஏதுமின்றி அவர் அற்புதமாக உயிர்த்தப்பியுள்ளார். சஞ்ஜனா, சோமா, கேவல் ஆகியோர் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மூணாக், தல்வாரி மற்றும் பரித்தா கிராமங்களில் ஊழியம் செய்ய அர்ப்பணிப்புள்ள தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க; நமது ஊழியத்தை விட்டு வெளியேறி இருக்கும் சுதேச ஊழியரான லாலி மீண்டும் ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்காமலிருக்க; பாப்பட் மூணாக் பகுதியிலுள்ள நமது விசுவாசிகளைத் திசைதிருப்பும் வண்ணம் தவறான போதனைகளைத் தரும் வரிந்தர் மனம் மாறவும், நமது விசுவாசிகள் சத்தியத்தை இனம்புரிந்து நடந்துகொள்ளவும்; லிலாகலன் மற்றும் குலிரியா கிராமங்களில் ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட; நீரஜ், மோனா, ரஜினி, பர்வீன், கீதா, ஜெஸி ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைத் துணைகள் விரைவில் அமைய; தான் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பணியில் சேர நீரஜிற்கு நீதிமன்ற அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

சங்ரூர்:
ஐசக் ஆபேல் & அன்னாள் ரோஸ்லின்

துதிக்க: 3 இடங்களில் சத்சங் கூடுகைகளும், 2 இடங்களில் இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன. 5 பேர் புதிதாக கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கை செய்துள்ளனர். பிசாசு தொல்லையிலிருந்தும், தீராத வயிற்றுவலியிலிருந்தும் புல்புல் அற்புத சுகம் பெற்றுள்ளார். தீய ஆவியின் கட்டிலிருந்து விடுபட்ட சராப்ஜித் கௌர் தற்போது மழலை பாக்கியமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரவி, கமலேஷ், ராம்பால், புல்புல் ஆகியோர் கிறிஸ்துவில் திடமாய் வளர; கஹான்கார் கிராமத்தில் நமது ஊழிய நிகழ்ச்சிகளை நடத்தவிடாமல் தடைசெய்யும் சராப்ஜித் கௌரின் மாமியாருடைய வாழ்வில் இயேசு இடைப்பட; சத்சங் கூடுகைகள் நடத்தப்பட்டுள்ள கிராமங்களில் நமக்குப் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; நமது ஊழியத்தை விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகளை சபை மூப்பர்களான சீதா சிங், ரீனா, சோனி கௌர் ஆகியோர் ஜெபத்துடன் முன்னெடுத்துச் செய்ய; வரும்நாட்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள 2 சத்சங் கூடுகைகள், 6 ஊழியத்திரைப்பட நிகழ்ச்சிகள், 6 புதிய கிராம சந்திப்புகள் யாவும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவும், 900 புதிய ஆத்துமாக்களைக் கண்டெடுப்பதற்கான இலக்கை கருத்தாய் நமது ஊழியர்கள் அடைந்திடவும் ஜெபிப்போம்.



புத்லாடா:

கிருபா ரக்ஷனா பரே & ஷகினா

துதிக்க: சுவிசேஷத்தினால் புதிதாக 5680 ஆத்துமாக்கள் சந்திக்கப்பட்டுள்ளனர். 14 புதிய கிராமங்களில் பொதிதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 19 சிறுவர் நிகழ்ச்சி களும், 16 பெண்கள் நிகழ்ச்சிகளும், 8 வாலிபர் நிகழ்ச்சிகளும், 17 பயிற்சி நிகழ்ச்சிகளும் ஆசீர்வாதமான முறையில் நடைபெற்று முடிந்துள்ளன. பர்னாலா பணித்தள தர்செம் சிங் எயிட்ஸ், காசநோய் மற்றும் மஞ்சள்காமாலை நோய்களிலிருந்து அற்புத சுகம் பெற்று, தானாகவே நன்கு நடந்துவந்து நமது ஆராதனைகளில் பங்கேற்கிறார். பட்டிண்டா பணித்தளத்திலிருந்து 11 பேர் நமது ஆலய ஆராதனைகளுக்குக் கிரமமாக வருகை தருகின்றனர். 13 பேர் புதிதாக இயேசுவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 8 வருடங்களாக இருக்கும் அறியப்படாத நோயினால் உண்டாகும் தாங்கொண்ணா வலியினிமித்தமும் தவிக்கும் சஷிபாலா ஷர்மா பூரண சுக மடைய; விவசாய அறுவடை பணிக்காகப் புலம்பெயர்ந்து பல்வேறு இடங்களுக்குச் சென்றுள்ள நமது விசுவாசிகளின் முழு பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

ஹரியானா

தோஷம்: ஜாண் டேவிட்சன்

செல்வராஜ் & எஸ்தர்

துதிக்க: முதல்முறையாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 6 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 13 இரவுநேர ஜெபக்கூடுகைகள், 13 சத்சங் கூடுகைகள் மற்றும் 5 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியநிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. நடந்து முடிந்துள்ள வாலிபர் கூடுகையில் பங்குப்பெற்ற வாலிபர்கள் கிறிஸ்துவுக்குள் பரிசுத்த வாழ்வு வாழ்வோமென உறுதி யெடுத்துள்ளனர். தேவகிருபையால் சத்துரு போராட்டத்திலிருந்து விடுபட்ட பூலோ தேவி தற்போது அவரது கிராமமான பலவாஸில் சுவிசேஷத்தை அறிவித்து வருகிறார். அவரது கணவரும் நல்ல ஜெபவாழ்க்கையைக் கடைபிடிப்பதோடு, வேதாகம வகுப்பு குழுவொன்றையும் பொறுப்பெடுத்து நடத்தி வருகிறார். நமது சபை மூப்பரான பான்சி, சபை ஆராதனையில் சத்தியத்தைப் பிரசங்கிக்கு மளவிற்கு வளர்ச்சிப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜீன்த் மற்றும் தோஷம் பகுதி களிலுள்ள சபை மூப்பர்கள் சரியான ஆவிக்குரியப்பயிற்சி பெற; பலவாஸ் கிராம ராஜ்பால், தானிமாகு கிராம சீதாராம், போஜ்ராஜ் கிராம கக்கு, ஆஸ்ராஃப் கார் கிராம சஞ்ஜய், கனக் கிராம பிரதாப், சுங்கர்பூர் கிராம ராம் பகத் ஆகியோர் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டுவதோடு, கிறிஸ்துவை இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள; அஜய், பல்வான், ஆஷிஷ், சாட்டு, வினய், பிங்கி, கன்வாரி, பலியாலி, மம்தா, சுரேஷ், இந்துரு ரவீந்தர், முகேஷ் மற்றும் அவர்களது குடும்பத்தினர் யாவரும் கிறிஸ்துவின் அன்பை ருசிக்கவும், கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கை செய்யவும்; ஜீன்த் மற்றும் தோஷம் பகுதிகளைச் சார்ந்த தனக் இனமக்கள் ஆவிக்குரிய மந்த நிலையிலிருந்து மனந் திரும்பி, கிறிஸ்துவில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பீனாக்ஷி B. வசாவா சுனில்

திரு. பிதான் ஹன்ஸ்தா

பெஹோவா:

போர்சத் பாபுபாய் & சரஸ்வதிபேன்

துதிக்க: புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 500 பேர் பயனடைந்துள்ளனர். 18 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 18 சத்சங் கூடுகைகளும், 6 பெண்கள் கூடுகைகளும் மற்றும் 3 வேதாகம வகுப்புகளும் முறையே நடத்தப்பட்டுள்ளன. 3 இடங்களில் காண்பிக்கப்பட்டுள்ள இயேசுத்திரைப்பட காட்சிகள் மூலம் 150 பேர் இயேசுவை அறிந்துகொண்டுள்ளனர். ரஜோத் கிராம லக்கன் கிறிஸ்துவண்டை வந்துள்ளார். நீதிமன்ற வழக்கொன்றிலிருந்து அனிதா சூமுக தீர்வு பெற்றுள்ளார். ஜெபத்தின்மூலம் சாகருக்கு இருந்த மூளைப்பிரச்சினை சுகமாகியுள்ளது. ரெலினா மற்றும் பப்லா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட்டுள்ளனர். சுவிசேஷத்தை எதிர்த்து வந்த சஞ்சு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளார். குஷால் மாங்கரா கிராம குருபால் தீய ஆவியின் தொந்தரவினால் அநேக கோவில்கள் மற்றும் மருத்துவ மனைகளுக்குப் பல வருடங்களாகச் சென்றுபார்த்தும் பயனேதுமில்லாத நிலையில், அவருடைய உறவினரான தர்ஷன் கர்த்தருடைய வார்த்தையைத் தனது சாட்சியுடன் குடும்பஜெபத்தில் பகர்ந்துகொண்டபோது, குருபால் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இப்பணித்தளத்திலுள்ள ஜாட் சீக்கியர்களில் இவரே முதல் விசுவாசியாக மாறியிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அனிதா, கீதா, தமனா, ரூனி மற்றும் ஆசாத் தைரியமாக தங்களது விசுவாசத்தை அறிக்கையிட; சந்தர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; சிர்தா கிராம ஜானியும், அவரது மனைவி பிரீத்தியும் இணைந்து வாழ; கய்தால் கிராம கமலேஷ் வயிற்றுக்கட்டியிலிருந்தும், ராம்நகர் காலனி பாலா குடற்புண் காய்ச்சலிலிருந்தும் குணமடைய; குரானா கிராம அஞ்சு, அனு, கரித், சுஸ்மா மற்றும் ஷாதி தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து விடுபட ஜெபிப்போம்.



கீழ்ப்படிந்த மரம்!

மேற்கு வங்காளம், மால்டா பணித்தளம். லோத்கண்டி கிராமத்தில் சோனேஷ் ஹஸ்தாவின் குடும்பம் மாத்திரமே விசுவாசிகள். ஒருநாள் இரவில் அதிக மழை மற்றும் புயல்காற்று வீசியதினிமித்தம் மரங்களெல்லாம் ஆக்ரோஷமாக ஆடிக்கொண்டிருந்தன. அவர்களுடைய வீட்டிற்கு அருகிலிருந்த ஆலமரம் வேரோடு சாய்ந்து அவர்களது வீட்டின் மேல் விழுந்துவிடுமோ என்ற அச்சத்தில் அன்றிரவு அவர்கள் உறைந்து போயிருந்தனர். அச்சத்தின் உச்சத்தில் அவர்கள் கர்த்தரை நோக்கி உதவிக்காக விண்ணப்பம் செய்தனர். விண்ணப்பத்திற்குக் கிடைத்த பதில் என்ன? வீடே நில நடுக்கத்தில் ஆடுவதுபோல் அசைந்தபோதிலும், சாலையோரத்தில் நின்ற அநேக மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தபோதிலும் ஆச்சரியமாக அந்த ஆலமரம் மட்டும் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து விழாமல் நின்றது. கர்த்தருக்கே மகிமை!





பிறந்தநாள் வாழ்த்துக்கள்

செல்வி. டோன்ஸாசின்
திருமதி. ரீனா ஆரோன்சிங்

உத்தராகண்ட்

மல்தன்சோர்:

ஷிஷு பால் & அனிதா

துதிக்க: புதிதாக 5 பேர் கிறிஸ்துவண்டை நெருங்கி வந்துள்ளனர். 3 கிராமங்களில் முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப் பட்டு, அதன்மூலம் 538 பேர் சந்திக்கப் பட்டுள்ளனர். 75 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக்கப் பட்டுள்ளன. 15 சத்சங் கூடுகைகளும், 7 வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும், 21 இரவுநேர ஜெபக்கூடுகைகளும், 1 வாலிபர் கூட்டமும் நடத்தப்பட்டுள்ளன. 4 புதிய ஜெபக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. சிங்குவும், மகேஷும் மனநோயிலிருந்து சுகமடைந்துள்ளனர். கிராம பஞ்சாயத்து செயலாளரான அனிதா, 7 வருடங்களாகச் சிக்கியிருந்த பில்லி சூனியக்கட்டிலிருந்து விடுபட 7 இலட்ச ரூபாயைச் செலவு செய்தும் பலனேதுமில்லாமல், இறுதியில் ஜெபத்தின் மூலம் பெற்றுள்ள விடுதலைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: போக்பூரில் நடைபெறவுள்ள ஆத்தும ஆதாயப்பயிற்சி நிகழ்ச்சிக்காக; ஜங்கிள் பார் மற்றும் தாரி திருச்சபைகளில் ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; பிருமதாரா மற்றும் ஜாஸ்பூர் பகுதிகளில் நமது ஊழியம் விரிவாக்கம் செய்யப்பட; கீதா, அனிதா, குர்மீத், ஜன்சீர், சரண்ஜித் ஆகியோர் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற; ராஜு, கெம்சந்த் மற்றும் பிந்தர் குடிப்பழக்கத்தி லிருந்து வெளிவர; சுல்சுவிந்தர், பப்லி, ஷிங், சரண்ஜீத், காளிசரண், சஞ்ஜனா, பூஜா, அர்ச்சனா, பிரிஜேஷ் மற்றும் சிலர் தங்களது விசுவாச அறிக்கையை தைரியமாக முன்னொழிய ஜெபிப்போம்.

தினேஷ்பூர்:

ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

துதிக்க: புதிதாக சத்திய வசனம் சுவிசேஷ மாக ஒரு கிராமத்தில் எடுத்துரைக்கப்பட்டு, அதன்மூலம் 35 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 8 சத்சங் கூடுகைகளும், 6 இரவுநேர ஜெபக்கூட்டங் களும் சீராக நடத்தப்பட்டுள்ளன. தல்புரா கிராம மக்கள் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டுகின்றனர். ராகேஷ் மற்றும் ராஜேஷ் பாபு ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றப்பின் ஆத்தும ஆதாயப்பணி களில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அனில், சுமித்ரா மற்றும் சக்கோஜ் பிசாசுகளின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசி ஷிம்லாவிற்கு இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கான பணத்தேவைகள் சந்திக்கப்பட; 5 கிராமங்களிலிருந்து பருவக்கால அடிப்படையில் ராஜஸ்தானில் பணிபுரிய புலம்பெயர்ந்து சென்றிருக்கும் நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு கர்த்தருக்குள் திடமாயிருக்க; தகராறினி மித்தம் ஏற்பட்ட தாக்குதலில் தலையில் காயமடைந்துள்ள ராஜேஷ் விரைவில் பூரண குணமடைய; அனார்கலி இரத்தச்சோகை பிரச்சினையிலிருந்தும், ராஜ்குமார் கல்லீரல் வீக்கத்திலிருந்தும் நன்கு சுகமடைய ஜெபிப்போம்.



நானக்மட்டா:

சிவகுமார் & சுசிலா மராக்

துதிக்க: சுவிசேஷத்தினால் புதிதாக 8 கிராமங்கள் சந்திக்கப்பட்டுள்ளன. 6 பேர் கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை அவரில் அறிக்கை செய்துள்ளனர். 2 வேதாகமங்களும், 30 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப் பட்டுள்ளன. 7 சத்சங் நிகழ்ச்சிகளும், 6 வீட்டு ஜெபக்கூட்டங்களும், 4 உபவாச ஜெபக்கூடுகைகளும் முறையே நடத்தப் பட்டுள்ளன. ஜஷான்தீப் சிறுநீர்ப்பாதை அடைப்பு பிரச்சினையிலிருந்து சுகம் பெற்றுள்ளார். குல்தீப் மற்றும் பல்ஜீத்தின் குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு நன்கு செவிசாய்ப்பதோடு, தங்களது இல்லங் களையும் ஜெபக்கூடுகைகளுக்கென திறந்து தருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: உடற்பகுதியைவிட தலைப்பகுதி பெரிதாக அமைந்துள்ள ஒன்றரை வயது சிறுவனான மன்பிரீத்திற்காக; விக்ரம் சிங் குடிப்பழக்கத்திலிருந்து மீள; ஜெஷான் சிங் விபத்தினால் தனது 2 கால்களிலும் ஏற்பட்டிருக்கும் முறிவுகளிலிருந்து விரைவில் குணமடைய; தனது பசுவையும், ஆட்டையும் இழந்திருக்கும் லக்விந்தருக்கு புதிய நல்ல கால்நடைப்பிராணிகள் கிடைக்க ஜெபிப்போம்.

ராஜஸ்தான்

உதய்பூர்:

ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

துதிக்க: புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. 7 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 150 பேர் முதல்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். 35 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. விசுவாசிகளுக்கான கூடுகைகள் 3 இடங்களிலும், தேடுவோர் முகாம் ஒரு இடத்திலும் ஆசீர்வாதமாக நடந்தேறி யுள்ளன. அம்பாலாவின் சகோதரருக்கு கல்லீரல் அறுவை சிகிச்சை சிறந்த முறையில் நடைபெற்று முடிந்துள்ளது. கடந்த 10 வருடங்களாக நமது சுதேச ஊழியரின் மகன் ராஜுவின்மீது சுமத்தப் பட்டிருந்த தவறான குற்றச்சாட்டு வழக்கில் சுமூகமான தீர்வு கிடைத்துள்ளது. மணிலால், சீமா, பிங்கு ஆகியோர் பொல்லாத ஆவிகளின் போராட்டங் களிலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். நமது மிஷனெரியையும் அவரது குடும்பத்தையும் பெரும் விபத்தினின்று தேவன் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: சில கிறிஸ்தவ குழுவினரால் தவறான போதனைக்கு ஆளாகியிருக்கும் நமது சராதித் திருச்சபை மக்கள் சுவிசேஷ சத்தியத்தில் உறுதியாக நிலைத்து நிற்க; ராசி, ஜலாம்ஜி மற்றும் கைலாசி தீய ஆவிகளின் தொந்தரவுகளிலிருந்து மீட்சி பெற; கருச்சிதைவு கோளாறினால் அவதிப்பட்டுவரும் சோனிக்காக; நமது சுதேச ஊழியரான ஆஷிஷ் தாமோர் கல்லீரல் நோய்த்தொற்றிலிருந்து முழு சுகமடைய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண் குல்லு

ஹனுமான்கட்: முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

துதிக்க: மாங்சார் கிராமத்தில் ஒரு புதிய திருச்சபை தொடங்கப்பட்டுள்ளது. சுரேந்தர் சிங் அரசாங்க வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சத்சங் கூடுகையின் மூலம் ஏறத்தாழ 280 ராய் சீக்கியர்கள் சத்திய வசனத்தைக் கேட்டுள்ளனர். தவறான குற்றசாட்டினால் சிறைவாசத்திலிருந்த நமது விசுவாசியான குசும் சிங்கிற்கு 6 மாத ஜெபத்திற்குப் பின் தற்போது ஜாமீன் கிடைக்கப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புற்றுநோயினிமித்தம் ஜெய்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஷியாம் கௌருக்காக; சானியாவிற்கு பாதுகாப்பான சுகப்பிரசவம் அமைய; கனடாவிற்குச் சென்று கல்விப் பயில வாஞ்சிக்கும் நமது சபை மூப்பரின் மகனுக்கு ஏற்றவேளையில் விசா கிடைக்க; சத்பால்பாய் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து சுகம் பெற; மஜ்பி சீக், ராய் சீக், ஜாட் சீக் இனமக்கள் யாவரும் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர ஜெபிப்போம்.

காஜுவாலா:

V. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

துதிக்க: ரவ்லா மண்டி மற்றும் தவனியா காலனி விசுவாசிகள் சுவிசேஷத்தைத் தங்களுக்கு அருகாமையில் வசிப்போருக்கும் அறிவிக்கின்றனர். தேவ கிருபையால் நமது விசுவாசியான லன்ஜாம் புதிய வீடொன்றைக் கட்டிமுடித்துள்ளார். பிரீத் விபத்தினால் உண்டான காயங்களிலிருந்து சுகமடைந்துள்ளார். இப் பணித்தளத்தில் தனித்தாள் சுவிசேஷப் பணியும், பல்வேறு இடங்களில் ஆவிக்குரிய பற்பல கூடுகைகளும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. நமது விசுவாசிகளின் நிலங்களில் நல்ல அறுவடையைக் காண்பதற்கும், அவர்களது காய்கறிகள் நல்ல விலைக்கு விற்பனையாவதற்கும் தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இவ்வருடத்தில் இந்திய இராணுவத்தில் இணைய முயற்சிக்கும் குர்விந்தருக்காக; மாதுரையின் சகோதரர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள; எவ்வித தடையுமின்றி நமது ஊழியக்கூடுகைகள் யாவும் கிரமமாக நடைபெற; காது கேளாமை மற்றும் வாய்ப்பேச இயலாமையினால் கஷ்டப்படும் சுக்பாலின் மூத்த மகனிற்காகவும், புத்தி சுயாதீனமற்று காணப்படும் அவரது மூத்த மகளிற்காகவும் ஜெபிப்போம்.

ஜெபம் ஈந்த உயர்வு!

ராஜஸ்தான், காஜுவாலா பணித்தளத்தைச் சார்ந்த விகாஷ்குமார், TVS இருசக்கர வாகன விற்பனை கடையொன்றை நடத்தி வருபவர். இவர் நமது விசுவாசியும், இவரது மனைவி நல்ல ஜெப வீராங்கனையும் ஆவர். இவர்கள் கடந்த வருட தீபாவளி பண்டிகையின் நாட்களில் 9 வாகனங்களை மாத்திரமே விற்பனை செய்திருந்த நிலையில், இவ்வருடம் தேவ கிருபையால் இவரது மனைவியின் விசுவாச ஜெபத்தினால் 37 வாகனங்களை இவர்கள் விற்பனை செய்துள்ளனர். எனவே, கிராம மக்கள் மத்தியில் இவர்களுடைய நற்சாட்சியுள்ள வாழ்வினிமித்தம் தேவ நாமம் மகிமைப்படுகிறது. அல்லேலூயா!



உத்தரப் பிரதேசம்

பன்சி:

கோன்கா கிரி பாபு & லூர்து மேரி

துதிக்க: முதல்முறையாக சுவிசேஷம் 250 பேருக்கு பறைசாற்றப்பட்டுள்ளது. 10 புதிய ஏற்பாடுகளும், 58 இயேசு வரலாற்று சரிதை புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஜமால்பூரைச் சார்ந்த குஷ்வாஹா, மொஹாரா ஆகிய இரு புதிய இனமக்கள் சுவிசேஷத்தின்மீது விருப்பம் காட்டுகின்றனர். பன்சியிலுள்ள கோனிக்புரா இனத்திலிருந்து புதிதாக மக்கள் நமது ஞாயிறு ஆராதனைக்கு வர ஆரம்பித்துள்ளனர். மொஹாரா செஹரியா இனமக்கள் சுவிசேஷத்தின் மீது நல்ல வாஞ்சை காட்டுகின்றனர். மொஹாரா மற்றும் கெஜ்பாய் ஆகிய கிராமங்களில் புதிதாக கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: செஹரியா இனமக்கள் வாழும் 10 கிராமங்களை வாரந்தோறும் நமது ஊழியர்கள் கிரமமாகச் சந்திக்கவும், இவர்கள் மத்தியில் பரிசுத்தாவியானவர் கிரியை நடப்பிக்கவும்; ஞாபக மறதி கோளாறிலிருந்து நட்டுராம் மற்றும் குர்ரியும், இரத்தணு சம்பந்தமான கோளாறுகளிலிருந்து அர்ஜுன்லாலின் குடும்பத்தினரும், தோல் வியாதியிலிருந்து ஹேமாவும் சுகம் பெற; ஜமால்பூரில் வைத்து குஷ்வாஹா மற்றும் நய் இனமக்கள் மத்தியில் நடைபெறவுள்ள தெருப்பிரசங்க ஊழியத்திற்காக ஜெபிப்போம்.

கோண்டா சிறுவர் விடுதி:

ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

துதிக்க: பிராந்திய அளவில் நடைபெற்ற வாலிபர் மேளாவில் நடத்தப்பட்ட வேதாகம போட்டித் தேர்வில்நமது விடுதிப்பிள்ளைகள் முதல் 3 வெற்றி நிலைகளையும் தட்டிச்சென்றுள்ளனர். இங்கு நடைபெறும் சிறிய ஜெபக் குழுக்கள், வேதாகம வகுப்புகள் மற்றும் ஊழியப்பின்தொடர்பணிகள் யாவும் மிகுந்த பயனுள்ள ஆவிக்குரிய ஆதாயத்தைத் தருகின்றன. திருமண மாகி 7 வருடங்களுக்குப்பின் அர்ச்சனா தற்போது மகப்பேறு பாக்கியம் பெற்றுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: லக்னோ நீதிமன்றத்தில் நிலுவையிலிருக்கும் நமது விடுதிப் பிரச்சினை சுமூகமான தீர்வு காண; 10-ம் & 12-ம் வகுப்பு அரசுத்தேர்விற்கு ஆயத்தமாகும் நமது 15 பிள்ளைகளும் படிப்பில் அதிக கவனம் செலுத்த; வரும்நாட்களில் பால்வா, தில்காய் மற்றும் கெங்வால் கிராம மக்கள் யாவரும் கிறிஸ்துவின் மந்தையில் இணைய; நமது ஊழியர் தும்பா சௌதிரி சிறுநீரகம் மற்றும் மூட்டு வலிக்காக எடுத்துக்கொண்டிருக்கும் சிகிச்சையில் நல்ல முன்னேற்றம் காண; நமது விடுதிப்பிள்ளைகளின் ஆவி, ஆத்துமா, சரீர சுகத்திற்காக ஜெபிப்போம்.



கான்பூர் பிராந்தியம்:

ஸ்ரீனிவாசன் & ஷீபா G.

துதிக்க: கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் புதிதாக 58 பேர் இணைந்துள்ளனர். பாக்ய நகரில் வைத்து 'எழும்பிப் பிரகாசி' என்ற கருப்பொருளில் நடத்தப்பட்ட வாலிபர் கூடுகையில் 300 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். நமது ஊழியர்கள் கைம்கஞ்ஜ் மற்றும் பர்த்தனா பணித்தள விசுவாசிகளைச் சந்தித்து நன்கு ஊக்கப்படுத்தியுள்ளனர். ஜீப் குழுவினர் மூலம் 23 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டதோடு, 17 இடங்களில் இயேசுத்திரைப்படமும் திரையிடப்பட்டுள்ளது. ஹரேரன் பணித்தள மக்களிடம் 647 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவை விசுவாசிப்பதினி மித்தம் சிறையிலிருக்கும் நமது சுதேச ஊழியர் ஜெய்லால், சபை மூப்பர் கிஷோரிலால், பூலா தேவி மற்றும் ஸ்ரீமதி விரைவில் விடுதலை பெற; பகுவா மற்றும் பிந்தகி சபை விசுவாசிகள் தங்களுக்கு அடிக்கடி நேரிடும் எதிர்ப்புகளின் மத்தியில் தங்களது விசுவாசத்தில் நிலைத்திருக்க; ஃபத்தேஹ்பூர் மாவட்டத்திலுள்ள ஆலயம், மருத்துவமனை மற்றும் கிறிஸ்தவப்பள்ளியில் நடைபெறும் நமது ஊழியத்தை எதிர்ப்பதில் மும்முரம் காட்டி வந்தோர் தற்போது நமது காட்டம்பூர் மற்றும் புக்ராயன் பணித்தளங்களிலும் தங்களது பார்வையைப் பதிக்க ஆரம்பித்துள்ளதினால், இவர்களிடமிருந்து நமது ஊழியக்குழுவினர் தேவஞானத்துடன் தப்பிப்பிழைத்து பாதுகாப்பான முறையில் ஊழியம் செய்ய; ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேதாகம வகுப்புகள் மற்றும் ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் நமது உள்ளூர் தலைமைத்துவம் மேலும் வலுப்பெற ஜெபிப்போம்.

மத்தியப் பிரதேசம்

டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

துதிக்க: புதிதாக 300 பேருக்கு சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. 10 பேர் புதிதாக கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 100 புதிய ஏற்பாடுகளும், 12 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. சந்தீப்பும், சுவப்ணாவும் நமது ஊழியத்தில் புதிதாக இணைய ஆயத்தமாயுள்ளனர். அத்தார் சிங் மீண்டும் நம்முடன் இணைந்து ஊழியம் செய்ய விருப்பம் காட்டுகிறார். பிரிஜ்பூரில் வைத்து நடைபெற்ற வெளிப்புற சந்திப்புக் கூடுகையில் 30 பேர் கலந்துகொண்டுள்ளனர். மெஹ்காவ் திருச்சபையில் நல்ல ஆவிக்குரிய வளர்ச்சி தென்படுகிறது. ஜெயில் ரோடு பகுதியில் புதிதாக ஞாயிறு ஆராதனை துவங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இங்குள்ள எல்லாத் திருச்சபைகளிலும் அர்ப்பணிப்புள்ள சபை மூப்பர்கள் எழும்ப; தய், சுல்தான்பூர் மற்றும் நயகாவ் திருச்சபை மக்கள் தங்களது உலகப்பிரகாரமான வாழ்வின் பற்றிலிருந்து விடுபட; காலு & பாவ்னா மற்றும் விஜய் & பய்ஜந்தி தம்பதிகள் குழந்தை பாக்கியங்கள் பெற; விசு மற்றும் சங்கீதா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து மீட்கப்பட; நகியோந்தாவின் குடும்பமும், ஹதம் சிங்கின் குடும்பமும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஷீபா ஜாஸ்மின் ஜுபராஜ்

பன்சேமால்:

வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

துதிக்க: புதிதாக 2 பேர் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. ஒரு தொலைக்காட்சி ஊழிய நிகழ்ச்சி ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளது. அதிக மக்கள் தங்களுக்காக ஜெபிப்பதற்கும், வேத வசனங்களைக் கேட்பதற்கும் விருப்பம் தெரிவிக்கின்றனர். மலைப்பகுதியில் ஊழியத்திற்குச் சென்று கொண்டிருந்த போது, நமது ஊழியரின் இருசக்கர வாகனத்தின் டயர் வெடித்தபோதும் ஆபத்து ஏதுமின்றி தேவன் ஊழியர் களைப் பாதுகாத்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: புலம்பெயர்ந்து சென்றிருக்கும் விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் தொய்வில்லாமல் நல் வளர்ச்சியடைய; கணவரால் கைவிடப் பட்டிருக்கும் இளவயது சின்சிலியா கிராம அக்காபாய் முதுகுத்தண்டுவட கட்டியிலிருந்து அற்புத சுகமடைய; நடக்க முடியாமலிருக்கும் கேவ்டி கிராம சுர்பான் இரத்தணு கோளாறிலிருந்து பூரண குணமடைய ஜெபிப்போம்.

நேப்பாநகர்:

ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

துதிக்க: சுவிசேஷம் புதிதாக 3 கிராமங் களில் அறிவிக்கப்பட்டுள்ளது. 5 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பட்டேல்தானா மற்றும் பம்லாபாத் கிராமங்களில் 2 சிறப்புக்கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. 2 வயது சிறுவனான சந்தீப் பாம்புக் கடியின் ஆபத்திலிருந்து நமது சபை மூப்பர் சோபாராமின் ஜெபத்தினால் காப்பாற்றப்பட்டுள்ளான். நமது விசுவாசி யான ராஜ்லிமணியின் ஜெபத்தின்மூலம் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் கஷ்டப்பட்ட மம்தாவின் மகன் பூரண சுகம் பெற்றுள்ளார். இரவுநேரத்தில் ஏதோ விநோத உருவத்தைக் கண்டு பயந்த பயத்திலிருந்து மங்கலாபாயை அவரது கணவரின் ஜெபத்தின் மூலம் பெலப்படுத்திய தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குடிப்பழக்கத்தை கைவிட்டு விட்டு நமது கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வாழ்ந்து, தற்போது விசுவாசத்தை விட்டு வழுவி பிற சமய குருக்களைப் பின் பற்றும் பாலிராம் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; ஆதிவாசி மக்களுக்கும் வனத்துறை அதிகாரிகளுக்குமிடையே காடுகளில் மரம் வெட்டுவதினால் உருவாகியிருக்கும் பிரச்சினை தீர; கரும்பு வெட்டும் பணி மற்றும் கூலி வேலைகளுக்காக பல இடங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றிருக்கும் நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும், அவர்கள் கிறிஸ்துவின் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும்; குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்றிருக்கும் சுனிலின் தாயார் மீண்டும் சுகபத்திரமாக வீடு வந்து சேர ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ராணி ஜெஸிலெட் பால் ஆல்பர்ட்

கால்வா: ஐசக் & சீதா

துதிக்க: சுவிசேஷம் புதிதாக 100 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 10 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. 2 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகைகளும், மேலும் தரணியில் வைத்து 2 நாட்கள் பஜன் கூடுகைகளும் நடத்தப்பட்டுள்ளன. பானு மஞ்சள் காமாலை நோயிலிருந்து தனது மகனின் விசுவாச ஜெபத்தினால் சுகம் பெற்றுள்ளார். முழங்காலைக் கொண்டு நடக்குமளவில் பாதிக்கப்பட்டிருந்த முன்னா நமது சுதேச ஊழியரின் ஜெபத்தின்மூலம் தற்போது நன்கு நடக்க ஆரம்பித்துள்ளார். ராம்லால் மூலப்பிரச்சினையிலிருந்தும், ராகுல் பெரியம்மை நோயின்போது போட்டுக்கொண்ட ஊசி மருந்தினால் உண்டான பாதிப்பிலிருந்தும் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஷியாம் லால் 6 வருடங்களுக்கு முன்பு இழந்துபோன தனது பார்வையை மீண்டும் பெற; கொலுகஞ்சா பழக்கத்திலிருந்தும், ராம்பால், அமர்சிங் மற்றும் ஜெய்சிங் குடிப்பழக்கத்திலிருந்தும் விடுபட; நமது சுதேச ஊழியரான ஷோபாராம் அடிக்கடி ஏற்படும் வயிற்றுவலியிலிருந்து பூரண சுகமடைய ஜெபிப்போம்.

ஜார்க்கண்ட்

கோர்பாடா:

A.R. கின்ஸ்லி & ஷைனி

துதிக்க: லன்திபஹாடி கிராம தேவராஜ், கோல்குண்டா கிராம ஷலோமி மற்றும் படுதா கிராம சச்சின் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், கடி கிராம விமலா வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு பிரச்சினையிலிருந்தும், தில்லிபாடா கிராம ஆபிரகாம் மற்றும் தாவூத் குடும்ப அங்கத்தினர்கள் காய்ச்சலிலிருந்தும், ரெபெக்கா மலேரியா காய்ச்சலிலிருந்தும் சுகமடைந்துள்ளனர். சுயநினைவற்ற நிலையில் ஓர் ஆற்றினருகே மயங்கிக் கிடந்த டேனியல் அற்புத சுகம் பெற்றுள்ளார். விடுதியில் தங்கிப்படித்து வரும் நமது சுதேச ஊழியரின் மகளுக்கு இருந்த சுகவீனத்திலிருந்து தேவன் தந்துள்ள சுகத்திற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது பெரும்பாலான சபை மூப்பர்கள் தொழிலினிமித்தமாக இடம் பெயர்ந்து சென்றுள்ளதால், அவர்கள் நடத்தி வந்த ஆலய ஆராதனைகள் எவ்வித தடையுமின்றி தொடர்ந்து நடைபெற; கயில்யா மற்றும் ஜம்ரி மண்ணீரல் பிரச்சினையிலிருந்தும், தெபொரா வலிப்பு நோயிலிருந்தும் சுகமடைய; கருப்பைக்கட்டி அறுவை சிகிச்சைக்கு ஆயத்தமாகும் எஸ்தருக்காக; நமது புதிய தொடர்பாளர்களான ராமா மற்றும் ஜுமாய் குடும்ப அங்கத்தினர்கள் விசுவாசத்தில் நன்கு வளர; பாலுதா சிறுவர் பராமரிப்பு மையத்திலுள்ள பிள்ளைகளின் சரீர மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஏஞ்சல் ரோஞ்ஜய் நர்சாரி

புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி, பந்தேனி:

விக்டர் ஜெயசீலன் & பிரின்சஸ் நகோமி; கிப்ஜென் & மாவி; சாந்தினி, மெர்சி, ஹெலன்

துதிக்க: நமது பள்ளி மாணவர்கள் இருபாலரும் 3 நாட்களாக நடைபெற்ற சிறப்பு விளையாட்டு தினங்களில் தங்களது உடற்பயிற்சி தாலந்துகளை கால்பந்து, கிரிக்கெட் மற்றும் பிற விளையாட்டு நிகழ்ச்சிகள் மூலம் நேர்த்தியாக வெளிப்படுத்தியுள்ளனர். தும்காவில் ஒழுங்குச் செய்யப்பட்டிருந்த வாலிபர் முகாமில் 11-ம் & 12-ம் வகுப்புப் படிக்கும் 11 பெண் பிள்ளைகளும், 14 ஆண் பிள்ளைகளும் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். நமது சென்னை ஜெபக்குழுவினர்கள் மூலம் 500 புத்தகங்களை நாம் நமது பள்ளி நூலகப் பயன்பாட்டிற்கென கிடைக்கப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தங்களது முதல் பருவத்தேர்வை எழுத ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நமது மாணவர்கள் அத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்து நற்தேர்ச்சி பெற; திருவனந்தபுரத்தில் B.Com., பட்டப்படிப்பைப் படித்துக்கொண்டிருக்கும் நமது மாணவர்களான தரம்ராஜ் மற்றும் பிரேம்தாஸ் தங்களது பாடங்களை நன்குப் புரிந்து படிக்க; மதுரை பகுதிக்கு அருகாமையிலுள்ள கிரண் பொதுப்பள்ளியில் 11 &12-ம் வகுப்பு நிலைகளில் படித்துவரும் நமது பள்ளி மாணவர்கள் 12 பேரும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற; அடிக்கடி பெலவீனப்படும் பற்பல வகுப்பு நிலைகளைச் சார்ந்த நமது மாணவர்களான சுயித் ஆஷன், முன்னா சந்தோஷ், கால்வின் லாசரஸ், ஜார்ஜ் சஞ்ஜய், சந்தீப் சோட்டாகூர்ஜா, தாவுத் ராம்சந்தர், தேவ தில்லா ஆகியோரின் உடல்நிலைகள் நன்குத் தேறிவர; தனது அதிக பெலவீனத்தினிமித்தம் விடுதியில் தங்கிப்படிக்க இயலாதவாறு இருக்கும் UKG மாணவன் பய்தாவிற்காக; பந்தேனி பள்ளி வளாகத்தில் தங்கிப்பணிபுரியும் 17 உள்ளூர் பணியாளர்களுக்கு நல்ல குடியிருப்பு வசதிகள் அமைய ஜெபிப்போம்.

கண்ணீரைக் கண்ட தேவன்!

மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித்தளம். கிஸ்தாபூர் கிராம கோயா இனத்தைச் சேர்ந்த ஷோபா கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்ததை முன்னிட்டு, அவரது கிராமத்தினர் பஞ்சாயத்தைக் கூட்டி ஷோபாவை அவர் தனது விசுவாசத்தைக் கைவிடவில்லையென்றால், அவரைக் கிராமத்தை விட்டு வெளியேற்றி ஒதுக்கி வைக்கப்போவதாக மிரட்டினர். அவரை மீண்டும் மதம் மாற்றுவதற்காக ஓர் நாளையும் முன்குறித்தனர். இச்செய்தியை அவர் மிகுந்த கண்ணீருடன் நமது ஊழியர் மற்றும் பிற விசுவாசிகளுடன் பகிர்ந்தார். அவர்களும் அவருக்காக ஜெபித்து, அவரை உற்சாகப்படுத்தினர். இதைக் கண்ட தேவன், கிராம மக்கள் தீட்டிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படாதபடி அதைத் தடுத்து நிறுத்தினார். தேவனுக்கே மகிமை!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கவிதா திம்மேஷ்

திரு. ஃபெலிக்ஸ் கமாலியேல் எட்வர்ட் S.S

ஹன்ஸ்டிகா: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

துதிக்க: புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷத்தின் மூலம் 350 ஆத்துமாக்கள் சந்திக்கப்பட்டுள்ளனர். 16 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சிறுவர் வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் 200 சிறுவர்கள் கலந்துகொண்டதில் 100 பேர் கிறிஸ்துவைப் புதிதாக அறிந்து கொண்டுள்ளனர். சகாரா கிராமத்தின் அருகிலுள்ள பகத்பூர் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசியொருவரின் வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த அவரது எருமை மாட்டை அவர் சந்தைக்குப் போயிருந்தபோது, வேறொரு எருமை மாடு தனது கொம்பினால் அந்த மாட்டைக் குத்தி காயப்படுத்தியது. இவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதால் அந்த மாட்டை யாரும் காப்பாற்ற முனையாமல், அதை கிராமத்தினர் அனைவரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். தற்செயலாக அப்பக்கம் வந்த வேறொரு கிராமத்தினர் மூலம் அம்மாடு காப்பாற்றப்பட்டு இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கர்ப்பப்பை கட்டியினால் 8 மாதங்களாகச் சிரமப்பட்டுவரும் ரிங்கு கஸ்தா விரைவில் சுகம் பெற; நமது புதிய விசுவாசிகளான தல்கு டுடு மற்றும் சமாய் டுடு காசநோயிலிருந்தும், சகாரா கிராம புது டுடு மூளை பாதிப்பிலிருந்தும் நற்சுகம் பெற; சீரான திருமண வாழ்வு இல்லாததினிமித்தம் ஜமுனியா கிராமத்தினர் மத்தியில் குடிகொண்டிருக்கும் விபச்சார ஆவி அகற்றப்பட; அர்ப்பணிக்கப்பட்ட தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க; ஒவ்வொரு திருச்சபையினரும் ஆத்தும பாரத்தோடு செயல்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆத்தும இலக்கை அடைய ஜெபிப்போம்.

அமரபாடா:

வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா

துதிக்க: புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் விளைவாக 744 பேர் முதல்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். 12 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 9 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைந்துள்ளனர். 3 இடங்களில் நடத்தப்பட்ட சிறுவர் வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளின் மூலம் 236 பிள்ளைகள் வேத வசனங்களைக் கற்றறிந்துள்ளனர். 13 வாலிபர்கள் தங்களது வாழ்வை கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணித்துள்ளனர். பக்கவாதத்திலிருந்து டேவிட் சோரேனும், மலேரியாவிலிருந்து சுகுந்தர் மராண்டியும், விரை வீக்கப் பிரச்சினையிலிருந்து பாபுஜோன் ஹன்ஸ்தாவும், இருமல்சளி மற்றும் குடற்புண் காய்ச்சலிலிருந்து ஆஷிக் ஹெம்ரோமும், மஞ்சள் காமாலை நோயிலிருந்து பரமிஸோர் ஹன்ஸ்தாவும், வலிப்பு நோயிலிருந்து சோனத்தான் மராண்டியும் அற்புத சுக மடைந்துள்ளனர். நமது சுதேச ஊழியர் நெல்சன் மராண்டியின் மனைவியான ராஜ்முனி முர்மு பித்தப்பை மற்றும் மஞ்சள் காமாலை நோயினிமித்தம் உண்டான வயிற்றுவலியிலிருந்தும், அதற்கான அறுவை சிகிச்சையிலிருந்தும் ஜெபத்தின்மூலம் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுமி ஹெம்ரோம், மரியம் பெஸ்ரா மற்றும் லூக்காஸ் ஹெம்ரோம் வலிப்பு நோயிலிருந்தும், துலாத் ஹன்ஸ்தா இருமல் சளி தொல்லையிலிருந்தும், சுரஜ் முர்மு மலேரியாவிலிருந்தும், மன்சி மராண்டி மற்றும் நிர்மல் முர்மு காசநோயிலிருந்தும் விரைவில் பூரண சுகமடைய; பப்லு பஸ்கி மற்றும் ரிச்சர்ட் ஹன்ஸ்தாவின் குடும்பங்களில் குழந்தை பாக்கியங்கள் அருளப்பட; கலிதோஹா மற்றும் தூபர்னா ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்ட தகுந்த நிலங்கள் கிடைக்க ஜெபிப்போம்.



பத்னா & பர்ஹர்வா சந்தால் சிறுமியர் விடுதி:

பீட்டர் பிரபாகரன் & விமலா; வசாவா அருணாபேன், சிங் நய் சியான், கிருஷ்ணவேணி, ஆலீஸ் ஷீபா

துதிக்க: சுவிசேஷத்தின் மூலம் 10 கிராமங்களிலுள்ள 1069 பேர் புதிதாக சந்திக்கப்பட்டுள்ளனர். 9 பேர் தேவனுடைய விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். பாம்புக்கடியிலிருந்து சலோமி ஹன்ஸ்தா காப்பாற்றப்பட்டுள்ளார். நடந்துமுடிந்த வாலிபர் முகாமில் 43 வாலிபர்கள் கலந்துகொண்டதோடு, அதில் பங்குப்பெற்ற மரியம் தனது வாழ்வை முழுநேர ஊழியத்திற்காக அர்ப்பணித்துள்ளார். கார்கர்வா கிராமத்தில் புதிதாக வேதாகம வகுப்புக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. வேதாகம தியான வேளையில் சுயநினைவின்றி மயங்கி விழுந்த சாந்தி முர்முவும், குளியலறையில் மூளைகாசநோயினிமித்தம் இரவு நேரத்தில் சுயநினைவின்றி மயங்கி விழுந்த பவுலினா மராண்டியும் நன்கு சுகமடைந்துள்ளனர். திண்டுக்கல் & ராஜபாளையம் ஜெபக்குழுவினர் நமது விடுதிப்பிள்ளைகளைச் சந்தித்து, உற்சாகப்படுத்திச் சென்றுள்ளமைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: துகுஜோரில் நமது விசுவாசிகளால் கட்டப்பட்டுள்ள சிறிய ஆலயமொன்றின் பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக நடைபெற; சஞ்ஜய் சோரேன் மற்றும் கானு ஹெம்ரோம் காசநோயிலிருந்தும், சொகிலி, கங்கை சோரேன், ஸ்ரீ சோரேன் மற்றும் பர்கா முர்மு பக்கவாதத்திலிருந்தும், சொகிலி மற்றும் பார்வதி டுடு இரத்தத்தொற்றிலிருந்தும், தக்ரா முர்மு சிறுநீரகக் கோளாறிலிருந்தும், பனியாடி மற்றும் ரெபெக்கா ஹன்ஸ்தா பெண்ணியப் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற; சாத்ரா மற்றும் சிமல்தாப் பகுதி சபை மூப்பர்கள் தங்களது வேலைப்பணியினிமித்தமாக இடம்பெயர்ந்து சென்றுள்ளதால், அவர்களின் பொறுப்பிற்குள்ளான சபைகளை எடுத்து நடத்துவதற்குத் தகுந்த ஆட்கள் கிடைக்க; படிப்பில் பின்தங்கியுள்ள பிள்ளைகள் பாடங்களில் அதிக ஆர்வம் காட்ட; உணவறை கட்டுமானப்பணி விரைவில் முடிவடைய; மின்னினைப் பிற்கான தேவைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட ஜெபிப்போம்.

கட்டுகள் அவிழ்ந்தன!

மகாராஷ்டிரா, தலாசரி பணித்தளம். வெலுகாம் கிராம சக்ரியாபாய், 15 நாட்களாக அவருக்கு நேரிட்ட சத்ரு போராட்டத்தினிமித்தம் அவர் மனதளவிலும் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தார். அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று சிகிச்சைக்கென அதிகப்பணம் செலவழித்தபோதும், அவருக்கு சுகம் கிடைக்கவில்லை. எனவே கூடுதலாக 15 நாட்கள் அவரைக் கயிறுகளினால் கட்டி, வீட்டிலேயே அடைத்து வைத்திருந்தார்கள். பின்பு அவரை ஆலயத்திற்குக் கொண்டு சென்றனர். அங்கு அனைத்து விசுவாசிகளும் சபைமூப்பர்களும் அவருக்காகத் தொடர்ந்து உபவாசித்து ஜெபித்தார்கள். ஜெபத்தைக் கேட்ட தேவன், அவரை முற்றிலுமாகச் சுகமாக்கி, தெளிந்த புத்தியைக் கட்டளையிட்டார். தற்போது அவர் நமது ஞாயிறு ஆராதனைகள் மற்றும் ஜெபக்கூடுகைகளில் பங்கேற்கிறார். அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பால் சாலமோன் D.

தீன்பஹாட் & பகையா:

ஜெபக்குமார் & பொன்லதா;
நெகேமியா & அனாமிகா பெகு;
பிபின் பீஹாரி பிரதான் &
ஜாரனா பரிச்சா

துதிக்க: ஜட்டேரி, பய்ரியாகித்தா மற்றும் பதர்கனி கிராமங்களில் சுவிசேஷ ரத ஊழிய நிகழ்ச்சிகள் மூலம் ஏறத்தாழ 800 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது சுதேச ஊழியரொருவர் ஜெபித்த ஜெபத்தின் மூலம் நமது முதல் விசுவாசியான புல்ஜுரி பக்கவாதப் பாதிப்பிலிருந்து சுகம் பெற்றுள்ளார். 18 வருடங்களாகப் பிசாசின் பிடியில் சிக்கியிருந்த மாகினி தற்போது விடுதலை பெற்று, இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். 2 புதிய குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டுகின்றனர். கிறிஸ்துவை அறியாத சோட்டி குஜர் பாம்புக்கடியினிமித்தம் தான் நாடிவந்த நமது சுதேச ஊழியரொருவரின் ஜெபத்தின்மூலம் ஆபத்தினின்று காப்பாற்றப்பட்டுள்ளார். தீய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டிருந்த தனது கிராம பெண்ணொருவருக்கு குடிப்பழக்கத்திலிருந்து மீண்ட மகேந்தர் தனது குடும்பத்துடன் ஏறெடுத்த ஜெபத்தின் விளைவால் அப்பெண் பூரண விடுதலையடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மதன் ஆலயம் தேவ நாம மகிமைக்காக விரைவில் பிரதிஷ்டை செய்யப்பட; பய்சா கிராமத்தில் ஆலயம் கட்ட தகுந்ததோர் நிலம் சீக்கிரத்தில் கிடைக்க; மஹூரியா, கோலாபன்னா ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்டப்படுவதற்கு எடுக்கும் முயற்சிகள் யாவும் கைக்கூடிவர; வரும்நாட்களில் நடத்தவிருக்கும் கூட்டங்கள் யாவும் நமது விசுவாசிகளுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக அமைய ஜெபிப்போம்.

நோனிஹாட்:

பென்ஹர் M. & மேரி ஜான்சி ராணி

துதிக்க: கடந்த மாதத்தில் 850 பேருக்கு சுவிசேஷ வார்த்தைகள் பகரப்பட்டுள்ளன. அதில் 27 பேர் கிறிஸ்துவின் மந்தையில் விசுவாசத்துடன் இணைந்துள்ளனர். 10 கிராமங்களில் வசிப்போர் சத்திய சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேட்டறிந்துள்ளனர். தம்னி மராண்டி வயிற்று வீக்கத்திலிருந்தும், சிப்வான் கிரி புற்று நோயிலிருந்தும் சுகமடைந்துள்ளனர். 4 பல்வேறு இடங்களில் 225 பிள்ளைகள் பயனடையும் அளவிற்கு நடைபெற்ற சிறுவர் வேதாகமப்பள்ளி ஊழியங்கள் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. அதில் 27 பிள்ளைகள் நமது முதியோர் கல்வித் திட்ட நிகழ்ச்சிகளின் மூலம் அவர்களும் எழுதப்படிக்க பயிற்சிப்பெறுமாறு இணைந்துள்ளனர். மின்னதிர்வினால் பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் சிப்லால் மராண்டி ஜெபத்தின்மூலம் பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மஜாரா, ஆஸ்னா, குர்வா, மோஜ்சலா ஆகிய கிராமங்களிலுள்ள மக்களுக்கு இயேசுத்திரைப்படம் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்படும் வாய்ப்பு கிடைக்க; பற்பல கிராமங்களிலிருக்கும் சபைகளின் மூலம் அக்கிராம மக்கள் யாவருக்கும் துரிதமாக சுவிசேஷம் வெடித்துப் பரவ; புற்றுநோய் மற்றும் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது விசுவாசிகள் அனைவரும் தேவனின் சுகமளிக்கும் தொடுதலை உணர ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. நிஷா டேவிட் மஸிஹ்

மேற்கு வங்காளம்

மால்டா: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

துதிக்க: புதிதாக 23 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. அநேக நாட்களுக்குப்பின் சோனிதி முர்மு ஜெபத்தினால் சுகபத்திரமாய் வீடு திரும்பியுள்ளார். முத்ருதங்கா, சல்போனா ஆகிய கிராமங்களில் முழுஇரவு ஜெபக்கூடுகைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 146 இல்லங்களில் சுவிசேஷப்பணி தீவிரமாக நடைபெற்று முடிந்துள்ளது. நீம்தங்கா மற்றும் மானிக்பூர் கிராம விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் பொறுமையுடன் வளர்வதோடு, தங்களுடைய உறவினர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பறைசாற்றுகின்றனர். ஹீராமுனி முர்மு மற்றும் ஓர்பிதா டுடுவிற்கு மஞ்சள்காமாலை நோயிலிருந்து கிடைத்துள்ள சுகத்திற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் அதற்கு நன்கு செவிசாய்க்கவும், கிறிஸ்துவில் தைரியமாக தங்களது விசுவாசத்தை அறிக்கையிடவும்; மழை பற்றாக்குறையினிமித்தமாக மக்கள் பல இடங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்று பணி செய்வதினால் பாதிப்பிற்குள்ளாகும் சபை ஆராதனை மற்றும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நிலப்பிரச்சினைகளை உருவாக்கி பிரிவினைகளை உண்டுபண்ண எத்தனித்து, ஆதிவாசி மக்கள் மத்தியில் செயலாற்றிவரும் ஒரு முக்கிய அரசியல் குழுவினர் மனம்மாறி சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவும், நிலப்பிரச்சினைகள் யாவும் சுமூகமான தீர்வுகளை அடையவும்; சுவிசேஷத்தை எதிர்ப்போர் யாவரும் அச்செயலைக் கைவிட்டுவிட; வீடுகளில் இருக்கும் பிசாசு தொல்லைகளை அப்புறப்படுத்துவதற்காக ரூ.3,000/- முதல் ரூ.10,000/- வரை வசூலித்து மக்களை ஏமாற்றும் கள்ளப்போதகர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

தபன்: R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்; ரஞ்சன் கஸ்லா, வனபர்லா சதீஷ் குமார்

துதிக்க: தௌசி கிராம பரிமோல் பஸ்கி பக்க வாதத்திலிருந்து சுகம் பெற்று, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். 6 புதிய ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைந்துள்ளனர். 10 இடங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியம், 50 இல்லங்களில் நடைபெற்ற வீடுகள்தோறும் சுவிசேஷப்பணி கூட்டங்கள், 7 இடங்களில் இரவுநேர ஜெபக்கூடுகைகள் இவைகளின் மூலம் 700 பேர் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். இப்பணித்தளத்தைச் சார்ந்த நிரஞ்சன் சோரேனின் குடும்பம் இப்பகுதியில் சுதேச ஊழியராகப் பணிசெய்ய நியமிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்பணித்தளத்திற்கான ஆத்தும இலக்கை நமது ஊழியர்கள் கருத்தாய் அடைய; நுருல் அரசியல்வாதிகளைக் கண்டால் உண்டாகும் பயத்திலிருந்தும், சுசியன் மனித பயத்திலிருந்தும், பூடுல் பிசாசு பயத்திலிருந்தும் விடுபட; அதிபயங்கர விபரீத இணையதள விளையாட்டுகள் மற்றும் சமூக வலைதள செயலிகளில் சிக்குண்டு இருக்கும் இளம் வாலிப மற்றும் வாலிப வயது பிள்ளைகள் யாவரும் அவைகளிலிருந்து மீண்டு கிறிஸ்துவண்டை வர; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்கள், இயேசுத் திரைப்பட ஊழியநிகழ்ச்சிகள், பெரிதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூடுகைகள், விசுவாசிகளுக்கான முகாம், சபை மூப்பர்களுக்கான முகாம் மற்றும் வீடுகள்தோறும் ஜெபக்கூடுகைகள் அனைத்தும் ஆசீர்வாதமாக நடந்தேற; நமது சுதேச ஊழியர், சபை மூப்பர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்கள் யாவரின் குடும்பங்களும் தேவ ஆவியானவரின் பலத்தைப் பெற்று ஊழியம் செய்ய; திருமணமாகி 5 வருடங்களான ராஜு மற்றும் 9 வருடங்களான நயனிற்கு குழந்தை பாக்கியங்கள் அருளப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. தேவ கிருபை விஜய் பாபு

அஸோம்

சிலபதார்:

கோண்ட் தேவு விஷ்ராம் &
ராந்தே நய்னாபேன்

துதிக்க: இப்பணித்தளத்தில் நமது ஊழியர்கள் புதிதாகப் பணியமர்த்தப்பட்டு, சுவிசேஷம் புதிதாக ஒருவருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அகாஜன் கிராமத்திலிருந்து சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த மழைக்காலங்களில் தேவன் நமது விசுவாசிகள் யாவரையும் சுகநலத்துடன் காத்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது ஊழியர்கள் தாங்கள் புதிதாகப் பணியமர்த்தப்பட்டிருக்கும் இப்பணித்தளத்தில் தேவனுக்கென்று அதிகமான ஆத்துமாக்களைக் கொள்ளைப்பொருளாய் கண்டெடுக்க; கங்கன்நகர், அகாஜன், போர்முர்யா, காந்திநகர் 1, 2 & 3, கதல்குர், சீத்தாமரி, மிஸ்ஸிங்பூர் மற்றும் சோமானியா கிராம மக்கள் அனைவரும் மெய்தேவனை அறிந்துகொள்ள; ஜெகதீஷ், தேவ்நாத் மற்றும் அவரது மனைவி குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; கிறிஸ்துவுக்கென இம்மக்களைச் சந்திக்கும் பணியில் மேலும் அநேகர் தோள்கொடுக்க; பாபா, மோகன் மற்றும் அபியின் குடும்பங்கள் யாவும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட; சீத்தாமரி திருச்சபை மக்கள் குடிப்பழக்கத்திலிருந்து முழுமையாக விடுபட்டு, கிறிஸ்துவுக்குள் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ ஜெபிப்போம்.

குஜராத்

பாவ்நகர்:

அகிலேஷ் குமார் & கிரண்தேவி

துதிக்க: புதிதாக 2 கிராம மக்களுக்கும், நாரி கிராமம், பாவ்நகர் விஷர்மா சொசைட்டி மற்றும் கே.எம்.எஸ். கம்பெனியைச் சார்ந்த 39 பேருக்கும் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது; அதில் 3 பேர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர். புதிதாக 2 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். கீதாபேனின் குடும்பத்தினர் மற்றும் நிலேஷ்பாய் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து கமலேஷ், பிரிஜேஷ் மற்றும் ராமச்சந்திராவின் மைத்துனரின் குடும்பம் விடுபட; ஜாகுபேனிற்கு ஒரு நல்ல வேலை கிடைக்கவும், அவர் நமது ஊழியத்தில் உதவி புரியவும்; குடும்பத்தினரால் ஜெபக்கூடுகைகளில் பங்குப்பெற முடியாதபடி தடைசெய்யப்படும் பாவ்நகர் கிராம பெண் விசுவாசிகளுக்காக; ஃபால் குனிபேனின் குடும்பத்தினர் கிறிஸ்துவின் நாமத்தை விசுவாசத்தோடு அறிக்கை செய்ய ஜெபிப்போம்.



சொரம்பா:

புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

துதிக்க: புதிதாக 101 பேருக்கு சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. நமது ஊழியர்கள் சனோதாரா, ராகிபுரா மற்றும் கன்வார் கிராம மக்களைச் சந்தித்து, அவர்களின் தேவைகளுக்காக ஜெபித்து வந்துள்ளனர். நீட்டாபேனும், பின்மாற்ற மடைந்திருந்த ஒருசில விசுவாசிகளும் மீண்டும் நமது ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளனர். கஸ்வாவ் கிராமத்தில் நடைபெற்ற கூடுகையில் 25 பெண்கள் கலந்துகொண்டனர். அதில் தனிப்பட்ட விதத்தில் மஞ்சுபேன் மற்றும் பிங்கிபேனிற்கு சுவிசேஷத்தை அறிவிக்க கிடைத்த வாய்ப்பிற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ராஜ்வாத் மற்றும் கஸ்வாவ் கிராமங்களில் சிறுவர் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட; ராஜ்வாத், ஃபுல்வாடி மற்றும் தடாகுய் திருச்சபை மக்கள் மத்தியில் பரிசுத்த ஆவியானவர் நிறைவான மனந்திரும்புதலின் ஆவியைக் கட்டளையிட; நிலேஷ்பாய் & ரவிதாபேனிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்கப்பெறுவதின் மூலம் அவர்களது கிராமத்தில் இயேசுவின் அன்பைப் பகர திறந்தவாசல் கிடைக்க; செல்ஃபோன் பயன்பாட்டு அடிமைத்தனத்தினால் ஆராதனைகளில் பங்குப்பெற விருப்ப மற்றவர்களாகக் காணப்படும் நமது இளம் விசுவாசிகள் அந்த அடிமைத்தனத்தி லிருந்து விடுதலை பெற; குடிப்பழக்கத்தி லிருந்து தீபக்கும், விலேஷும் விடுபட; பபிதா இரத்தணு கோளாறிலிருந்தும், நிலேஷ் சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற; பட்டுவாடா கிராம விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் வைராக்கிமாய் இருக்க; ராஜ்வாத் மற்றும் ஃபுல்வாடி சபைகள் மீட்டெடுக்கப்பட; சுவிசேஷத்தைக் கேட்டுள்ள மஞ்சுபேனும், பிங்கிபேனும் அதற்கு செவிசாய்க்க ஜெபிப்போம்.

விஜயநகர்: விஜய் குமார் & சுஷீலா

துதிக்க: புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைக்கப் பட்டுள்ளனர். 6 மாதங்களாக இருந்துவந்த பெண்ணியப் பிரச்சினையிலிருந்து தவாரிபேன் ஜெபத்தின்மூலம் நற்சுகம் பெற்றுள்ளார். தீக்காயங்களினால் அவதிப்பட்டுவந்த நமது விசுவாசியின் 3 வயது மகன் ஆர்யன் தற்போது நன்கு குணமடைந்துள்ளான். சித்ராதிரி கிராமத்தி லிருந்து ஒரு புதிய குடும்பம் நமது ஆலய ஆராதனைகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். ஜெபத்தின்மூலம் மஜுபேன் இரத்தழுத்தக் கோளாறிலிருந்து சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இந்த பண்டிகையின் நாட்களில் காட்டுப்பகுதிகளுக்குள் சென்று மந்திரவித்தைகளைக் கற்றுக்கொள்வ தற்கும், இருளின் அந்தகார ஆவிகளை ஏவி விடுவதற்கும் செல்லும் அநேக பெண்கள் இத்தீயப்பழக்கத்திலிருந்து விடுபட்டு மனம் மாற; 15 வருடங்களாக தீய ஆவியின் தொந்தரவிற்கு ஆளாகியுள்ள பிந்துவும், ரமீலாவும் அதிலிருந்து விடுதலை பெற; விபத்தில் ஜெக்தீஷை இழக்கக்கொடுத் திருக்கும் அவரது மனைவி மற்றும் 4 சிறுபிள்ளைகளின் மனஆறுதலுக்காக; கோக்ரா சிறுநீருடன் இரத்தம் கசியும் பிரச்சினையிலிருந்தும், ஷாந்திலால் மூட்டு வீக்கத்திலிருந்தும் சுகமடைய; தபாய்சா, சிகாரி மற்றும் சம்பலைபன்வா கிராம ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் தடையின்றி முடிவடைய ஜெபிப்போம்.



தாத்ரா & நகர் ஹவேலி

ராண்தா விடுதி:

மார்குஸ் மால்தோ & சாரா

துதிக்க: சரும சிரங்கு பிரச்சினைகளிலிருந்து ஏற்ற சிகிச்சையின் மூலம் ஏராளமான பிள்ளைகள் சுகமடைந்துள்ளனர். நமது ஜாவ்டா விடுதியில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 47 பிள்ளைகள் கலந்துகொண்டு, வேத வசனங்களின் மூலம் தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். சில்வாசாவில் வைத்து நடைபெற்ற பணித்தள அளவிலான வாலிபர் கூடுகையில் திரளான கல்லூரி மாணவர்கள் வந்து கலந்துகொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விடுதியில் பணியாற்ற அர்ப்பணிப்புள்ள விடுதிப்பொறுப்பாளர் மற்றும் சமையல் பணியாளர் கிடைக்கவும்; தோல்நோய் மற்றும் காது நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது விடுதிப்பணியாளரான நரேஷின் மகன் அங்கித்தும், மகள் நித்திக்ஷாவும், மற்றொரு நமது விடுதிப்பணியாளரான சுமனின் மகன் சாந்த்லாலும் விரைவில் சுகமடைய; படிப்பில் பின்தங்கியிருக்கும் பிள்ளைகள் தங்களது பாடப்பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த ஜெபிப்போம்.

கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

துதிக்க: சிறப்பாக நடைபெற்ற வாலிபர் கூடுகையின் மூலம் 3 சபைகளைச் சார்ந்த 100 வாலிபர்கள் ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். தப்லோன் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக நடந்தேறியுள்ளது. சிறுமி கிங்கல் ரமாவிற்கு விசுவாசிகள் உபவாசித்து ஜெபித்தபோது தீராத நெஞ்சுவலியிலிருந்து முழுசுகம் கிடைத்துள்ளது. 11-ம் வகுப்புப் படிக்கும் நமது விசுவாசியொருவரின் மகன் அனோ மூலப்பிரச்சினையிலிருந்து குணமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அநேகமுறை பின்மாற்றமடைந்து சென்ற பட்ஜாய் கிராம சில்லு பாய் கடைசி நிலை புற்றுநோயிலிருந்து விரைவில் அற்புத சுகமடையவும், அவரது வீட்டாரனைவரும் கிறிஸ்துவின் மந்தையில் இணையவும்; ராமுபேன் கர்ப்பப்பை வீக்கத்திலிருந்தும், ரஞ்சனா, சாலினி மற்றும் லசிபேன் சரும அரிப்பு பிரச்சினையிலிருந்தும், பன்னிபேன் இருதய கோளாறிலிருந்தும், காஞ்சன்பேன் தைராய்டு பிரச்சினையிலிருந்தும் குணமாக; வரும்நாட்களில் நமது விசுவாசிகள் எவரும் எச்சூழ்நிலையிலும் தங்களது விசுவாசத்திலிருந்து பின்மாற்றமடையாமலிருக்க தேவன்தாமே நமது ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் சரீர மற்றும் ஆவிக்குரிய விதங்களில் நன்மைபுரிய ஜெபிப்போம்.

கிருபை ஈந்த வாழ்வு!

பஞ்சாப், புத்லாடா பணித்தளத்தைச் சார்ந்த வாலிபரான அன்மோல் சிங் ஓர் பயங்கர விபத்தைச் சந்தித்ததின் விளைவாக அவரது இருசக்கர வாகனம்கூட கால்வாயில் விழுந்து விட்டபோதிலும், கர்த்தருடைய பெரிதான கிருபையால் கையில் சிற்சில எலும்பு முறிவுகளுடன் அவர் உயிர் தப்பினார். அவரைப் பெரும் காயங்களின்றி உயிர் பிழைக்கச் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள்!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. அர்ச்சனா மோகன்

மகாராஷ்டிரா

இகத்புரி: நாகராஜன் & திலகவதி

துதிக்க: புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. மொராம்பி மற்றும் தம்னி கிராமங்களில் பெண்கள் கூடுகை சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. 20 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. சிர்செட் மற்றும் மொராம்பி கிராமங்களில் வேதாகமப்பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளன. விகிகாவ் கிராம சுரேகாவின் ஜெபத்தின்மூலம் 3 வருடங்களாக அவரை விட்டுப் பிரிந்துசென்றிருந்த கணவர் மீண்டும் வீடு திரும்பியுள்ளார். வடிவாரா கிராம சத்தியபாமா கண் பிரச்சினையிலிருந்தும், மொராம்பி கிராம விஷால், யோகான் மற்றும் சாம்னி கிராம லலிதா இருமல்சளி மற்றும் மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்தும், கரோலி கிராம கங்குபேன் நெஞ்சு வலியிலிருந்தும், விகிகாவ் கிராம ஆஷாபேன் சிறுநீர்நோய்த்தொற்று பிரச்சினையிலிருந்தும் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மகூர்லி கிராம தாராவை ஜெபிப்பதற்கு தடை செய்து, அவரிடம் அடிக்கடி சண்டையிடும் அவரது மாமனார் மற்றும் மாமியார் இயேசுகிறிஸ்துவின் அன்பை உணர; விகி கிராம ஜாங்கு காது கேளாமை பிச்சினையிலிருந்து சுகமாகவும், நடக்க முடியாமலிருக்கும் அவரது பேரன் தீபக் விரைவில் நன்கு நடக்க ஆரம்பிக்கவும்; தங்களது சொந்த கிராமத்திலே கர்த்தரைத் தொழுது கொள்ள எதிர்ப்பு தெரிவிக்கும் உயர் ஜாதி மக்கள் மற்றும் கிராமத்தலைவர்களைக் கண்டு பயப்படும் நமது விசுவாசிகளின் பயம் நீங்க; எவ்வித வசதி வாய்ப்புகளுமின்றி மலைப்பகுதிகளில் வாழும் கத்காரி இனமக்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்து, கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்க; இப்பகுதியில் குழந்தைகளைக் கடத்துவோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

தலாசரி:

மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

துதிக்க: மட்கோன் கிராமத்திலிருந்து 10 பேர் புதிதாக கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைந்துள்ளனர். அன்ஜோரி, சாவர்பாடா, சாகன்பாடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. நடந்த வாலிபர் கூடுகையில் 25 வாலிபர்கள் பங்கேற்றுள்ளனர். 6 இடங்களில் விசுவாசிகளுக்கான ஆவிக்குரிய கூடுகைகளும், 4 இடங்களில் பெண்கள் கூடுகைகளும் சிறப்பாக நடந்தேறியுள்ளன. பர்சோத், சின்ச்பாடா, தனோரி, பிக்கர்பாடா ஆகிய இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் சிறந்த முறையில் நடைபெற்று முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஒசர்விகிரா மற்றும் சென்சாரி கிராமங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சிறப்பு ஊழிய நிகழ்ச்சிகள் யாவும் எவ்வித தடங்கலுமின்றி நடைபெற்று முடிய; கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடக் காத்திருப்போருக்காகவும், கடந்த முறை ரத்து செய்யப்பட்டதுபோல இம்முறை அந்நிகழ்ச்சி ரத்து செய்யப்படாமல் தேவநாம மகிமைக்காக நடந்து முடியவும்; பர்சோத், சின்ச்பாடா, தனோரி, பிக்கர்பாடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்படவும், அங்கே நமக்கு அதிக புதிய தொடர்பாளர்கள் கிடைக்கவும் ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. வேணி ஜாண்

சாவ்தா: வெங்கடேஷ் வடார் & ஷீபா

துதிக்க: புதிதாக 8 கிராமங்களில் 398 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. 14 இடங்களில் இயேசுத் திரைப்பட ஊழியம் சிறப்பாக நடை பெற்றுள்ளது. 96 சுவிசேஷ கைப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 14 பேர் புதிதாக கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். காந்தாரி கிராம இந்து தாதா மற்றும் சீதாபாய் 7 வருடங்களாக இருந்துவந்த குடிப்பழக்கத்திலிருந்தும், தீய ஆவிகளின் பிடிகளிலிருந்தும் அற்புத மாக விடுபட்டுள்ளனர். பஜன் நிகழ்ச்சி மற்றும் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணையும் ஆராதனை வெகுச்சிறப்பாக நடைபெற்றதோடு, அதற்கான செலவு களை நமது விசுவாசிகளே ஏற்றுக் கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பில்லிசூனிய பழக்கத்திலுள்ள கல்குத் கிராம குவார் சிங் அதிலிருந்து மீண்டு, கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்க; நமது ஊழியத்தை எதிர்க்கும் சான்யா தலாவ் கிராம விஷ்வாண் மகர்ஷ் மனந்திரும்ப; காந்தாரி கிராம ரோஷினி தெளிவாகப் பேசவும், துவர்கிபாயிற்கு தெளிந்த கண்பார்வை கிடைக்கவும்; ஓதோரா கிராம சீலா இரத்தப்போக்கிலிருந்தும், ராம்லால் தாதா மனநோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

ஜிம்மலாகட்டா:

ஸ்ரீனிவாசா & சுனிதா

துதிக்க: புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. 30 புதிய ஏற்பாடுகள் தரப்பட்டுள்ளன. 17 இடங்களில் வேதாகம வகுப்பு களும், 22 கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகளும், 5 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியமும் நல்ல முறையில் நடந்தேறியுள்ளன. பின் மாற்றமடைந்திருந்த நமது விசுவாசியான ஆரத்தி வயிற்றுக்கட்டியினிமித்தம் சுகம் வேண்டி, ஜெபத்திற்காக மீண்டும் நமது ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்ள தொடங்கியதின் விளைவாக அவர் தற்போது பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: எரகடா மற்றும் பெர்காபட்டி கிராமங்களில் பகுதியளவு கட்டப்பட்ட நிலையில் இருக்கும் ஆலயங்கள் வருகிற கிறிஸ்துமஸ் பண்டிகை நாட் களுக்குமுன் கட்டிமுடிக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கையிட; ரஜிதா அதிகப் படியான தலைவலி மற்றும் கண்பார்வை கோளாறிலிருந்தும், தேவக்காவின் தாயார் இருமல்சளி மற்றும் இரத்தணுக்குறைவு பிரச்சினையிலிருந்தும், ரத்னாபாய் பரதேசி பக்கவாதத்திலிருந்தும், பிரகன்யா மற்றும் சாரதா மனவளர்ச்சியின்மையிலிருந்தும், வெங்கட்டி கொண்டகோர்லாவின் தாயார் சிறுநீரகப்பிரச்சனையிலிருந்தும் சுக மடைய; வெங்கட்டி குமாரி மாந்திரீகக் கட்டிலிருந்து விடுபட; திருமணமாகி 10 வருடங்களாகியுள்ள திலீப் அத்ராம், 14 வருடங்களாகியுள்ள சந்தோஷ் கோமாசி, 15 வருடங்களாகியுள்ள வெங்கட்டி குமாரி மற்றும் சுகுமாரின் குடும்பங்களில் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லிபெனி ஜமி

மொல்கி: பரணிதரன் & செல்வராணி; கிஷிரோத் பிரதாப் & பிரீத்திலதா பாசுரு

துதிக்க: புதிதாக 6 பேர் கிறிஸ்துவின் விசுவாச வாழ்விற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். சுவிசேஷத்தினால் 300 பேர் சந்திக்கப்பட்டுள்ளனர். சாலிபாரியில் இயேசுத்திரைப்பட நிகழ்ச்சியொன்றும், 4 இடங்களில் ஒருநாள் உபவாச ஜெபக் கூடுகைகளும், 10 இடங்களில் ஊழியப் பின்தொடர்பணிகளும், 7 இடங்களில் பெண்கள் கூடுகைகளும், 10 இடங்களில் சிறுவர் வேதாகம வகுப்புகளும் மற்றும் திஜல் கிராமத்தில் வாலிபர் கூடுகையொன்றும் சிறந்த முறையில் நடைபெற்று முடிந்துள்ளன. 20 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் தரப்பட்டுள்ளன. பர்குந்த் மற்றும் பிஜிரிகெளன் கிராமங்களில் வாலிபர்களுக்கான வேதாகம வகுப்புகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. பர்குந்த், சாக்லியுமர், பிஜிரிகெளன், ஜிக்தாபாரி மற்றும் சக்திபாரி கிராமங்களில் வாலிபர் ஜெபக்குழுக்கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. 2 புதிய குடும்பங்கள் ஜமனாவில் நடைபெறும் நமது ஆராதனைகளில் பங்கேற்கின்றனர். காது கேளாமை பிரச்சினையிலிருந்து குன்னியா தாதா சுகமடைந்துள்ளார். பின்மாற்றமடைந்திருந்த தொர்காபாடா கிராம துர்காபாய் மீண்டும் ஆராதனைக்கு வரத்தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசிகள் விசுவாசத்தில் மேலும் வலுவடைய; ஃபூலாபாய் பிசாசு பிடியிலிருந்து விடுபட; நொபிலியா சிறுநீரகப் பிரச்சினையிலிருந்தும், லீலாபாய் சீறுநீர்நோய்த் தொற்றிலிருந்தும், சாக்லியுமர் கிராம செவந்திபாய் வாய்வீக்கத்திலிருந்தும் விரைவில் குணமடைய; பர்குந்தில் வைத்து நடைபெறவிருக்கும் EHA மருத்துவ முகாமின் மூலம் அநேகர் பயனடைய; தெல், மட்டியாபாரி, விட்லாபாரி, வெல்காதி மற்றும் பர்குந்த் பகுதிகளில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் சிக்கீரத்தில் முடிவடைய ஜெபிப்போம்.

விசுவாசத்தால் வெளிவந்த நாணயம்!

மத்தியப் பிரதேசம், பன்சேமால் பணித்தளம். பய்குரி கிராம சிறுமி அனுஷ்கா தன் கையில் ஓர் நாணயத்தை வைத்துக்கொண்டு விளையாடித்திரிந்தபோது, தனது மதிய உணவோடுகூட அந்த நாணயத்தையும் விழுங்கி விட்டாள். பின்பு அவள் தாய் அந்த நாணயத்தைக் குறித்து அவளிடம் வினவினபோது, அவளால் பதிலேதும்கூற இயலவில்லை. தாய் மிகவும் பயந்து, அடுத்த நாள் காலையில் சிறுமி காலைக்கடன் கழிக்கும்போது அந்த நாணயம் வெளியேறிவிட வேண்டுமென ஜெபித்தார். ஆனால் 2 நாட்களாகியும் அது வெளியேறாமல் இருந்தபோதிலும், தாய் தன் விசுவாசத்தை விட்டுவிடவில்லை. தொடர்ந்து ஜெபித்ததோடு, தண்ணீரும் எண்ணெயுமாகக் கலந்து மகளுக்குக் குடிக்கக்கொடுத்தார். பின்பு 2 நாட்கள் கழித்து எவ்வித மருத்துவ உதவியுமின்றி அந்த நாணயம் வெளியேறிவிட்டது. தாய் மகிழ்ந்து கர்த்தரை மிகவும் ஸ்தோத்தரித்தார். அல்லேலூயா!



ஆலப்பள்ளி:

குல்தீப் சிங் & குர்பிரீத் கௌர்

துதிக்க: சுவிசேஷம் 5 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 23 உபவாச ஜெபக்கூடுகைகளும், 88 சிறிய ஜெபக்குழுக்களும், 23 பெண்கள் ஜெபக்குழுக்களும், 1 வாலிபர் முகாமும் மற்றும் 1 தேடுவோர் முகாமும் நடத்தப்பட்டுள்ளன. 15 புதிய ஏற்பாடுகளும், 5 வேதாகமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஜன்னாபாய் தீய ஆவியின் பிடியிலிருந்தும், மாதுரிபாய் புகையிலை உட்கொள்ளும் பழக்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழியம் 2 நாடக நிகழ்ச்சிகள் மூலம் வெகுச்சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. தனது கணவர் வெளிப்புற சந்திப்பு ஊழியத்திற்குச் சென்றிருந்தபோது, திடீரென ஏற்பட்ட தீராத தலைவலியினால் வியர்வை அதிகமாகி கஷ்டப்பட்ட சங்கீத் கொஹாடி, மருத்துவமனை உதவியை நாடாமல் தனது மகனிடம் ஜெபிக்கக் கோரி, அந்த ஜெபத்தின்மூலம் பூரண சுகம் கிடைக்கப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நடக்கவிருக்கும் மேளா, 2 நாட்கள் ஆத்தும ஆதாய முகாம், சபை மூப்பர் பயிற்சி, தலைவிகள் & தலைவர்கள் பயிற்சி மற்றும் வேதாகம வகுப்புகள் யாவும் ஆசீர்வாதமாக நடந்தேற; சானியா இருதயநோய்ப் பிரச்சினையிலிருந்தும், கிரண் வலிப்பு நோயிலிருந்தும், அன்குஷ் ஹிச்சமி மற்றும் டிம்பள் ஹிச்சமி இரத்தணு கோளாறிலிருந்தும், ருஷி ஹிச்சமி ஒருபக்க பக்கவாதத்திலிருந்தும் சீரான ஆரோக்கியமடைய; நீட்டா துர்வாவையும், சுஷீலா பாயையும் தீய ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்க; சரியாகப் பேச, கேட்க, உணவருந்த இயலாமல் தவிக்கும் 6 வயது சிறுவன் அர்பன் மட்டாமி தேவ தொடுதலை உணர; கேலாஷ் குர்னால் ஒருபக்க பக்கவாதம் மற்றும் குடிப்பழக்கத்திலிருந்தும், ஜாமுஜி மது அருந்தும் பழக்கத்திலிருந்தும் சுகவிடுதலை பெற ஜெபிப்போம்.

அக்கல்குவா:

ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

துதிக்க: புதிதாக 110 பேர் தேவ வார்த்தையைச் சுவிசேஷமாகக் கேட்டறிந்துள்ளனர். 5 புதிய விசுவாசிகள் கிறிஸ்தேசுவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். விசுவாசிகளுக்கான பயிற்சி முகாமொன்றும், 2 ஆத்தும ஆதாய முகாம்களும் சிறப்பாக நடந்தேறியுள்ளன. 10 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் நடைபெற்றுள்ளன. தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் ஞாயிறு ஆராதனைகள், வாராந்திரக் கூடுகைகள் மற்றும் சிறுவர்களுக்கான 3 கூட்டங்களும்கூட கிரமமாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 4 மாதங்களாகச் சுகவீனமாக இருக்கும் நிலேஷும், இரத்தச்சோகை பிரச்சினையிலிருக்கும் தீபக்கும் சுகம் பெற; ஆலயங்களைப் பராமரிப்பதற்கான உதவிகள் கிடைக்கப் பெற; நமது விசுவாசிகள் யாவரும் விசுவாசத்தில் இன்னும் வளர; வரும்நாட்களில் பெரிதளவில் நடத்தத் தீர்மானித்திருக்கும் வெளிப்புற சந்திப்பு கூடுகை மிகுந்த நற்பலன்களை ஈந்திட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹேமலதா ரவிராஜ்

எட்டப்பள்ளி: வசாவே அர்விந்த் காலுசிங் & வால்வி எஜு

துதிக்க: கர்த்தருடைய வசனமாம் சுவிசேஷத்தை 2000 புதிய மக்கள் கேட்டுள்ளனர். அதில் 10 விசுவாசிகளாகியுள்ளனர். 12 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வசாமுன்தி, ஜிவிலி மற்றும் குருஸ்னார் கிராமங்களிலுள்ள 1500 பேர் ஊழிய நாடக நிகழ்ச்சிகளின் மூலமாக இயேசுவின் நற்செய்தியை இனிதே கேட்டறிந்துள்ளனர். விசுவாசிகளுக்கான முகாம்கள் எட்டப்பள்ளி, புக்சி, உதேரா மற்றும் காட்சூர் கிராமங்களில் வைத்து நடைபெற்றுள்ளன. பர்சல்கொன்டி, காட்சூர் மற்றும் பாலிபள்ளி கிராமங்களில் பெண்கள் கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. 3 இடங்களில் வைத்து நடத்திய ஆத்தும ஆதாய முகாம்களில் 20 பேருக்கும் அதிகமானவர்களுக்கு பல்வேறு பெலவீனங்களிலிருந்து சுகம் கிடைத்துள்ளது. 7 புதிய குடும்பங்கள் நமது ஆலய ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பேச மற்றும் நடக்க இயலாதிருக்கும் நமது புதிய தொடர்பாளரான யுவராஜ் குமோதிக்கு நல்ல சுகம் கிடைக்க; ரோஷ்னி மற்றும் ரமேஷ் மனநோயிலிருந்தும், சின்னிவதி பக்கவாதத்திலிருந்தும் சுகமடைய; சமுதாய அழுத்தங்களினிமித்தம் தங்களது விசுவாசத்தை உறுதியுடன் வெளிப்படுத்த தயக்கம் காட்டும் கட்டா கிராம மக்களுக்காக; கோத்மி பகுதியில் ஊழியம் செய்யும் வாய்ப்பு நமது ஊழியர்களுக்குக் கிடைக்க; புற்றுநோயினால் வருந்தும் குன்னி மகா அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

சாங்வி & சோப்டா விடுதி: கோபி கிருஷ்ணன் & மேனகா

துதிக்க: சத்திய சுவிசேஷம் ஏறத்தாழ 4 கிராமங்களில் வாழும் 180 பேருக்கு புதிதாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. 2 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் வந்து சேர்ந்துள்ளனர். சனிக்கிழமைகள்தோறும் நடைபெறும் வேதாகம வகுப்புகளில் 6 முதல் 12-ம் வகுப்புப் படிக்கும் பிள்ளைகள் தவறாமல் பங்கேற்கின்றனர். விடுதிப்பிள்ளைகளுக்கென ஒருநாள் ஆவிக்குரிய கூடுகையொன்று நடத்தப்பட்டுள்ளது. அருட்திரு. கமலேஷ் மூலம் நமது 10-ம், 12-ம் வகுப்பு பிள்ளைகளுக்குப் பல நல்ல ஆலோசனைகள் அளிக்கப்பட்டுள்ளது. வெளிதா, மொகிதி, கன்ஜியாபாடா மற்றும் பில்கேதா கிராமங்களில் நடத்தப்பட்ட ஒருநாள் உபவாச ஜெபக்கூடுகையில் சுமார் 42 பேர் கலந்து கொண்டுள்ளனர். மகாதேவ், கன்ஜியாபாடா மற்றும் வெளிதா கிராமங்களில் பெண்கள் கூடுகை கிரமமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. நமது விடுதிப்பிள்ளைகளுக்கென 3 நாட்கள் சிறுவர் வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. கர்ப்பப்பை வீக்கத்திலிருந்து கமலா அற்புத சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வெளிதா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற அனுமதி கிடைக்க; மகாதேவ் கிராம விசுவாசிகள் கிறிஸ்துவில் மேலும் வளர்ந்துப்பெருக; அமல்காவ் கிராம மக்கள் தங்களது வாழ்வில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சோப்டா பணித்தளத்தில் வாலிபர் கூடுகையொன்று நடத்தப்பட; கடந்த 5 வருடங்களாகப் படுக்கையிலிருக்கும் ரமேஷ் பூரண சுகமடைய; பிவ்கேதா மற்றும் வெளிதா கிராமங்களில் காணப்படும் எதிர்ப்புகள் யாவும் மறைய; தல்னேர் கிராம விசுவாசிகளை தேவன்தாமே எல்லாத் தீமை கட்கும் விலக்கிப் பாதுகாக்க; நஞ்ஜியபாடா கிராமத்தில் புதியதொரு ஆராதனைக்குழு துவங்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. டேவிட் மஸிஹ்

திருமதி. பாருட் சிலாபாய் ரடியா

வத்ஃபாலி: பிதுயூத் குமார் சிங், ஏபேல் ஹெம்ரோம்

துதிக்க: சுவிசேஷம் புதிதாக 3 கிராமங்களில் பகரப்பட்டதின் விளைவாக 401 பேர் முதல்முறையாக இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 5 பேர் கிறிஸ்துவின் விசுவாச வாழ்விற்குள் மனமுவந்து வந்துள்ளனர். 2 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. 8 சிறுவர் வேதாகம வகுப்புகளும், 2 தேடுவோர் முகாம்களும், 3 உபவாச ஜெபக்கூடுகைகளும், 12 வேதாகம வகுப்புகளும் விசுவாசிகளின் ஆவிக்குரிய நலனுக்காக முறையே நடத்தப்பட்டுள்ளன. சாக்தி பகுதியில் வைத்து சாதர்பாடா வாலிபர் முகாம் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. பிராந்திய அளவில் நடத்தப்பட்ட ஒருநாள் மேளாவில் நமது அனைத்து பணித்தள விசுவாசிகளும் பல மைல் தூரப்பயணச் சூழ்நிலைகளின் மத்தியிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக அதில் வந்து கலந்துகொண்டமைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது சபை ஆராதனைகளின் மூலம் புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள; சம்பா தீய ஆவியின் பிடியிலிருந்து மீள; தேவ ஒத்தாசையுடன் 2030-க்குள் அடைய வேண்டிய ஊழிய இலக்குகளை அனைத்து விசுவாசிகளின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றிட; பணியினிமித்தம் குஜராத்திற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் அங்கே தேவனுக்குகந்த பரிசுத்த ஜீவியம் செய்ய; இப்பணித்தள சபை மூப்பர்கள் ஊழியக்காரியங்களிலும், சபை ஆராதனைகளிலும் தங்களது பொறுப்பினை உணர்ந்து நடக்க ஜெபிப்போம்.

கர்நாடகா

ஷிக்காவ்: சுனில் குமார் & சங்கீதா

துதிக்க: புதிதாக 5 கிராமங்களுக்குச் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. ஷிக்காவ் ஆலய ஆண்டுவிழா ஆராதனை தேவநாமம் மகிமைப்படும்படி சிறப்பாக நடந்தேறியுள்ளது. திருமணமாகி 7 வருடங்களுக்குப் பின் சுனிதா, தான் விசுவாசித்து ஜெபித்ததுபோலவே அழகான பிள்ளைப்பேறு கிடைக்கப்பெற்றுள்ளார். 400 புதிய நபர்கள் சத்திய சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். விபத்தினால் ஏற்படவிருந்த பேராபத்திலிருந்து சந்தோஷ் கிருபையாகக் காப்பாற்றப்பட்டுள்ளார். துன்சியில் கிரமமாக வேதாகம வகுப்புகளும், சிக்மல்லியில் வெளிப்புற சந்திப்பு ஊழியமும் நன்கு நடைபெற்றுள்ளன. துன்சி சபையில் வைத்து சபை மூப்பர்களுக்கான கூடுகையும், பெண்களுக்கான கூடுகையும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சிறுநீரகங்களில் வந்திருக்கும் புற்றுநோய்க்கட்டி பிரச்சினையிலிருந்து லக்ஷ்மண்ணாவும் மற்றும் புற்றுநோயிலிருந்து ராஜேஸ்வரியும், பக்கிரியப்பாவும் அற்புத சுகமடைய; நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கல்லூரி ஆசிரியரான சிவாஜி இயேசுவின் அன்பால் தொடப்பட; சோமு, மாருதி, தரப்பா, பக்கிரியப்பா, மகாதேவப்பா மற்றும் ராஜேஸ்வரி இரட்சிக்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ள நமது சல்லாபி விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவண்டை வர; நமது புதிய விசுவாசியான கிரிஜாம்மா வயிற்றுவலியிலிருந்து நிவாரணம் பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மணிசெல்வி சாரதி

கானாப்பூர்:

வினயராஜ் & சாந்தா வினயராஜ்

துதிக்க: கடிகுப்பா, மடி-கன்ஜி, இடிகி, பிடி, கக்கேரி, பெக்காவாடா, கடாதானா பாகிவாடி மற்றும் நந்தகடா கிராமங்களில் எவ்வித தடங்கலுமின்றி அங்குள்ள சபை மூப்பர்களோடு சேர்ந்து நமது ஜீப் குழுவினர் சுவிசேஷத்தை அறிவித்துள்ளனர். புற்றுநோயினிமித்தம் மரணப் படுக்கையிலிருந்த கடாதானா பாகிவாடி கிராம நமது புதிய விசுவாசியான லக்ஷ்மி, நமது சபை மூப்பர் ருத்ரப்பாவின் ஜெபத்தின்மூலம் அற்புத சுகம் பெற்று, தற்போது அவர் வேலைக்கும் செல்ல ஆரம்பித்துள்ளதை முன்னிட்டு அவரது வீட்டில் ஸ்தோத்திரக் கூட்டமும், சபையில் அவரது சகோதரனின் குழந்தைக்குப் பிரதிஷ்டை ஆராதனையும் நடத்தப் பட்டுள்ளன. கல்லீரல் நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த பசவராஜின் உடல்நலம் தற்போது சீராகி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நந்தகடாவில் ஆலயம் கட்டுவதற்கான நிலத்திற்கு விரைவில் அனுமதி கிடைத்து, அந்நிலம் முறைப்படி பதிவு செய்யப்பட; கடன் பிரச்சினையிலிருந்து பசவராஜின் குடும்பம் வெளிவர; இடுப்புப் பகுதியில் பக்கவாதத்தினால் செயலிழந்து காணப்படும் நமது விசுவாசியான சிவரஞ்சனியின் தாயார் சுகமடையவும், 3 வருடங்களாக மந்திரக்கட்டினால் கட்டப்பட்டு துன்பத்திற்குள்ளாகியிருக்கும் அவக்கா விடுதலை பெறவும்; மூளைப்பகுதியில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டு ஓய்விலிருக்கும் நமது மிஷனரி வினயராஜ் சீக்கிரத்தில் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

ஆந்திரப் பிரதேசம்

மதனபள்ளி:

வெங்கடேசன் & சசிகலா

துதிக்க: பத்மாவதி, ரவி, ஷிவானி, சியாமளாம்மா, ராமச்சந்திரா, சுரேந்திரா, பத்மம்மா, மங்கம்மா, நாகரத்னா, தீப்பக்கா, வெங்கட்டம்மா ஆகியோர் நமது ஜெபக்கூடுகைகளில் புதிதாக வந்து கலந்துகொள்கின்றனர். அருணாவின் குடும்பம், லக்கய்யாவின் குடும்பம், கங்கண்ணா, தீனா, காயத்திரி, சரஸம்மா, நிர்மலாம்மா ஆகியோர் வெளிப்புற சந்திப்பு ஜெபக்கூடுகைகளில் தங்களது விசுவாசத்தைப் புதுப்பித்துக்கொண்டுள்ளனர். 8 இடங்களில் விசுவாசிகளுக்கான இரவுநேர ஜெபக்கூடுகைகளும், 4 கிராமங்களில் ஊழியப்பின் தொடர்பணிகளும் நடைபெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மனநோயின் பாதிப்பிலிருந்து ஷிவானி சுகம் பெற; தண்டலூரு பகுதியில் ஆலயம் கட்டுவதற்கான தகுந்த நிலம் அமைய; அதிகமான கிராமங்களில் தேவ இராஜ்யம் கட்டப்படுவதற்கென அதிக ஆள்பலம் கிடைக்க; சம்பவி, லக்ஷ்மி, அருணா மற்றும் சுஷ்மித்தாவிற்கு குழந்தை செல்வங்கள் கிடைக்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும், இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளும் எவ்வித இடையூறுமின்றி மிகுந்த ஆவிக்குரிய பலனளிக்கும் விதத்தில் நடந்து முடிய; நாய்க்கடியினால் அவதிப்படும் சுரேந்திராவிற்கு பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அன்பையா P.
திரு. அருண்குமார் G.
திரு. டேனியல் மார்வெல்ராஜ் D.

தமிழ்நாடு

இளம்பிள்ளை:

வில்சன் & ஜெயா

துதிக்க: இளம்பிள்ளை பகுதி ஆலய 21-வது ஆண்டுவிழா ஆராதனை மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது; அதில் 150 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர். நமது விசுவாசி யான சரண்யாவிற்கு B.Sc., நர்ஸிங் படிப்பிற்கு இடம் கிடைத்துள்ளது. சிலகாலம் நடக்க இயலாமலிருந்த திஜுபாலிற்கு அவரது தாயாருடைய விசுவாச ஜெபத்தினால் பூரண சுகம் கிடைத்துள்ளது. நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த பண உதவியை ரஞ்சிதமணி கிடைக்கப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆலய ஆண்டுவிழாவில் பங்கேற்ற மக்கள் யாவரும் இரட்சிப் பிற்குள் வர; கதிரேசன், தனசேகரன் மற்றும் குமார் தங்களது விசுவாச வாழ்வில் முன்னேற; இருசாயினுடைய குடும்பம் தங்களது விசுவாசத்தில் பொறுமையாய் முன்நடக்க; அழகம்மா, நிலா, குமார், மகேஷ்வரி ஆகியோர் இரட்சிப்படைய; கடன் பிரச்சினைகளின் மத்தியில் வாழும் நமது விசுவாசிகள் மனந்தளராமல், அந்த பாரத்தைக் கர்த்தரிடம் கொடுத்து அதிலிருந்து விரைவில் மீள ஜெபிப்போம்.

மேச்சேரி:

தர்மராஜ் R.R. & மரிய செல்வி

துதிக்க: ஒரு கிராமத்தைச் சேர்ந்த 20 பேருக்கு முதல்முறையாக இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. வேலைக்காகக் காத்திருந்த எஸ்தர், பூங்கோதை மற்றும் தினேஷ்ராஜிற்கு நல்ல வேலைவாய்ப்புகள் அமைந் துள்ளன. சாதபாடி மற்றும் குக்கல்பட்டி கிராமங்களிலுள்ள நமது விசுவாசிகளின் வீடுகள்தோறும் ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. சத்திமா & ரத்ன வேல் தம்பதியரின் குடும்ப வாழ்வில் தேவசமாதானம் நிலவி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சிறுநீரகக் கோளாறிலிருந்து கீதா நன்கு சுகமடைய; வரும்நாட்களில் சாதபாடி மற்றும் குக்கல்பட்டி கிராமங் களில் நடைபெறும் வீட்டுஜெபக் கூட்டங்களில் ஏராளமான மக்கள் கலந்துகொள்ள; அமரம், குக்கம்பட்டி மற்றும் பொதிகைப்பட்டி கிராமங்களில் ஜெபக்குழுக்கள் தொடங்கப்படவும், மக்கள் ஆர்வமாக அதற்கு ஒத்துழைப்பு தரவும்; ஜாண் சாமுவேல் மற்றும் டேவிட்டிற்கு இருக்கும் கடன் பிரச்சினைகள் விலக; சத்திய வசனம் விதைக்கப்பட்டுள்ள இக்கிராமங்கள் அனைத்திலும் வரும்நாட்களில் ஆவிக்குரிய அறுவடை மிகுதியாகக் கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சௌதரி ராஜேஷ் தாவ்லிபாய்

திரு. அனில் மாகாலி

செங்கம்: K.S. ஜாஷ்வா

துதிக்க: சபை மூப்பர்களுக்கான முதல் நிலை பயிற்சிகள் 9 பணி மையங்களில் நடந்து முடிந்துள்ளன. இப்பயிற்சி அவர்களுக்கு வேத வாசிப்பிற்கும், ஜெபத்திற்கும், தேவ வார்த்தையைத் தியானிப்பதற்கும், ஆத்தும ஆதாயம் செய்வதற்கும் மிகுந்த பயனளிக்கும் விதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. 4 கிராமங்களில் ஜெபக்கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. நமது சபை மூப்பர்களும், சுதேச ஊழியர்களும் பயன்படுத்தும் விதத்தில் ஜெபக்கையேடு சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. சாத்தனூர் திருச்சபை நாள் ஆராதனையை அச்சபை ஆதரவாளர்களோடு சேர்ந்து சபை மக்கள் யாவரும் மிகச் சிறப்பாகக் கொண்டாட தேவன் அருளிய ஈவிற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆரம்பிக்கப்பட்டுள்ள சபை மூப்பர்களுக்கான 2-ம் நிலை பயிற்சி மிகுந்த பலனுள்ளதாக அமைய; பட்டப்படிப்பு அளவிலும், சான்றிதழ் பெறும் அளவிலும் நடத்தப்படும் TAFTEE வேதாகம கல்வி இங்கே துவங்கப்பட; சாத்தனூர் சபை மூப்பரான செல்வம் மீது இருக்கும் விபத்து வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட; சேது மற்றும் கிரிஜாவிற்கு தகுந்த வாழ்க்கைத்துணைகள் அமைய; ஷாந்தி பிசாசின் பிடியிலிருந்து மீள ஜெபிப்போம்.

கூடவே இருப்பவர்!

மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித்தளம். எல்லராம் கிராமத்திற்கு நமது ஊழியர் 05.10.2022 அன்று பகலில் சென்று வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்துவிட்டு, பின்பு காமசூர் என்ற வேறொரு கிராமத்திற்கு மற்றொரு விசுவாசியுடன் இரவுக்கூடுகைக்காகக் காட்டுப்பாதை வழியே நடந்து சென்றார். போகும் வழி முழுவதும் எந்தவொரு கிராமமோ அல்லது சாலைவசதிகளோ இல்லாத பாதை, அது. இரவின் இருளோடு மழையும் பெய்து கொண்டிருந்தது. ஏற்கனவே அப்பாதையில் புகையிலைகளைப் பறித்து சேகரித்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணைச் சமீபத்தில் கரடியொன்று தாக்கிக் கொன்றுபோட்ட செய்தியை அவர்கள் அறிந்து, சற்று பயத்துடன் நடந்துபோய் கொண்டிருந்தபோது, நமது ஊழியர் திடீரென ஒரு பெரிய பாம்பைத் தெரியாமல் மிதித்தவுடன் அப்பாம்பு அவரது கால்களுக்குக்கீழாக வேகமாக உருவிச்சென்றது. இருவரும் பாதையில் குறுக்கே கடந்து சென்ற அப்பாம்பின் அளவைக் கண்டு, ஆச்சரியத்துடன் கர்த்தர் தங்களோடிருந்து தங்களைக் காத்த விதத்தை எண்ணி, கர்த்தரைத் துதித்தனர். பின்பு அவர்கள் அக்கிராமங்களுக்குச் சென்ற தங்களது ஊழிய நோக்கத்தை இனிதே முடிக்க தேவன் அவர்களுக்குக் கிருபை செய்தார். அல்லேலூயா!

381 மிஷனரி ஆல்பம்

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கைலாயபுரம் கிராமம். ஆண்டவரை அறியாத குடும்பத்தைச் சேர்ந்த திரு. இலட்சுமணன் & திருமதி. மாரி ஆகியோருக்கு முதல் மகனாக 03.06.1974-ல் சகோ. வேடியப்பன் பிறந்தார். இரண்டு சகோதரிகளும் உண்டு. இவர் M.A., பட்டப்படிப்பை முடித்து, ஒரு ஆங்கிலவழிப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்பு இவருக்கும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. முனுசாமி & திருமதி. தவமல்லி ஆகியோரின் மகளான இலட்சுமிக்கும் 08.02.2002-ல் திருமணம் நடைபெற்றது. 09.07.2003-ல் முதல் மகனும், 27.01.2006-ல் இரண்டாவது மகனும் பிறந்தனர். சகோ. வேடியப்பனின் தாயார் அடிக்கடி வாந்தி வருவது, உடல் சோர்வடைதல் மற்றும் ஜீரண கோளாறு இவைகளால் மிகவும் கஷ்டப்பட்டார். பல மருத்துவமனைகளுக்குச் சென்றும், அநேக மந்திரவாதிகளிடம் சென்றும் குணமாகவில்லை. சோர்வடைந்து இருந்த சமயத்தில் இவர்கள் பகுதியில் ஊழியம் செய்த நமது சுதேச ஊழியர் திரு. S. தேவகுமார் இவர்களது வீட்டிற்கு வந்து இயேசுகிறிஸ்துவைப் பற்றி சொல்லி இவருடைய தாயாருக்காக ஜெபித்தார். 'ஆண்டவர் சுகத்தைத் தருவார்' என்று சொல்லி, மாம்பட்டி என்ற கிராமத்தில் ஒவ்வொரு ஞாயிறும் நடைபெறும் ஆராதனைக்கு வந்து ஜெபிக்குமாறு கூறிவிட்டுப் போனார். அடுத்த நாள் சற்று சுமாராக இருந்தது. பிறகு ஆலயத்திற்குச் சென்று ஜெபித்தப்பிறகு உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. எனவே, ஒவ்வொரு வாரமும் தவறாமல் இவரது தாயார் ஆலயத்திற்குச் சென்று வந்தார். ஆண்டவர் அற்புதமான சுகத்தைத் தந்ததினால், அவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தனது பிள்ளைகளுக்கும் ஆண்டவரைப்பற்றி சொன்னார். அவர்கள் முதலில் கேட்கவில்லை; பின்பு மீண்டும் மீண்டும் சொன்னதால் கேட்டனர்.

சகோ. வேடியப்பன் ஆசிரியராகப் பணிப்புரிந்த பள்ளியில் FMPB-யின் மூலம் இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாம் நடைபெற்றது. அம்மருத்துவ முகாமிற்கு வந்த அருட்திரு. V. தாமஸ் அண்ணன் இவருக்கு மேலும் ஆண்டவரைப்பற்றி கூறினதால், இவர் குடும்பமாக ஒவ்வொரு வாரமும் தவறாமல் ஆலய ஆராதனையில் பங்குப்பெற்றார். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். பிறகு அருட்திரு.V. தாமஸ் அண்ணன் ஊழியத்தைப்பற்றியும் இவர்களிடத்தில் பகிர்ந்துகொண்டதால், இவர்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை வந்தது. எனவே, இவர்கள் குடும்பமாகச் சேர்ந்து ஜெபித்து, ஆசிரியர் பணி வேண்டாமென தீர்மானித்தனர். மேலும் அப்போஸ்தலர் 3:1-10-ம் வசனங்களின் மூலம் தேவன் இவரோடு இடைப்பட்டதினால், இயேசுகிறிஸ்துவின் பெரிதான அன்பு இன்னதென்பதை இவர் உணர்ந்து, அறைகூவல் பத்திரிக்கை மூலம் நமது மிஷனரி ஊழியங்களைப்பற்றி தெளிவாகத் தெரிந்துகொண்டார். 2003-ம் ஆண்டு சேலம்-டேனிஷ்பேட்டையில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில முகாமில் கலந்துகொண்டு, அங்கு பகரப்பட்ட தேவச்செய்தி மற்றும் பணித்தளப் பகிர்வைக் கேட்டு, முழுநேர ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தார். பின்பு சென்னையில் 2008-ம் ஆண்டு நடைபெற்ற மிஷனரி நேர்முகத்தேர்வில் இவர்கள் குடும்பமாகக் கலந்துகொண்டு, திருவேற்காட்டில் மிஷனரிப்பணிக்கான ஆயத்த வகுப்புகளை முடித்து, பெத்தேல் வேதாகமக் கல்லூரி, டேனிஷ்பேட்டை, சேலத்தில் ஓராண்டு மிஷனரிப் பயிற்சியைப் பயின்றனர். பயிற்சி முடிந்த பிறகு, அருட்திரு. வேடியப்பன் குடும்பமாக 29.04.2009 முதல் 30.08.2016 வரை ஆந்திரப் பிரதேசம், சித்தூர் பிராந்தியம், குலமாசனப்பள்ளி பணித்தளம் மற்றும் 31.08.2016-லிருந்து கலக்கடா பணித்தளங்களில் ஊழியம் செய்தனர். தற்போது 01.10.2022 முதல் சித்தூர் பிராந்தியத்தின் செயலராகப் பணிசெய்து வருகின்றனர். இவர்களது இரு மகன்களான ரேவன்ந்த் மருத்துவக்கல்வி முதலாம் ஆண்டு சென்னையில் படித்துவருகிறார். பகவந்த் +1 டோனாவூர் - சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகிறார். இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது அனுதின ஜெபங்களில் நினைவுகூருவோம்.



அருட்திரு. வேடியப்பன் & திருமதி. இலட்சுமி குடும்பம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நடத்தும்

இளைஞர் பாளையம் 2023

இளைஞர் பிரிவு பொன்விழா ஆண்டு

வாலிபர் முகாம்

இளைஞர் பிரிவு 50 ஆண்டுகள் கிறிஸ்துவோடு 1973 - 2023 இளைஞர் இயக்கமாய் தொடருவோம்

14.01.2023 சனிக்கிழமை காலை 7.00 மணி முதல்

▶

16.01.2023 திங்கட்கிழமை மதியம் 2.00 மணி வரை

இடம்

ஜெயராஜ் அன்னபாக்கியம்
சி.எஸ்.ஐ. பொறியியல் கல்லூரி வளாகம்,
நாசரேத், தூத்துக்குடி மாவட்டம்

செய்தியாளர்கள்

சுவி. **சுசி பிரபாகரதாஸ்**
சகோ. **C. ரெஜினால்டு**
சகோ. **S. ஜாண் பெர்லின்**
சகோ. **Y. நவநீதர்**
மற்றும் **பணித்தள மிஷனெரிகள்**

18 முதல் 30 வயதுக்-குட்பட்டவர்கள்

பதிவு கட்டணம் ரூ. 100/-

முன்பதிவிற்கு இதை ஸ்கேன் செய்யவும்

சிறப்பு பகிர்வு

திரு. **D. ஜெகதீஸ் பாண்டியன்**, I.A.S.,
Rtd. Chief Secretary, Gujarat



கருப்பொருள்

நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்

ஆகாய் 2 : 23

அன்புடன் அழைக்கிறோம்

Regd. Newspaper for India No.17759/69

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

Pendrive

Vol - 4

கிறிஸ்துவின்

பிறப்பு

இந்தியரின் விடுதலைக்காக

The One Birth that change all mankind



FMPB CHRISTMAS SONGS

கிறிஸ்துமஸ் பாடல்களின் பென்டிரைவ்

நன்கொடை - ரூ.200/-

செயல் வீரர் தீர்ப்புகள்

வாங்கி பயன்பெறுங்கள்!

4GB mp3 MUSIC NON-STOP

Published by: S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***